
www.tamilarangam.net

RAYA

Raya

# தூண்டில்



Tamilische zeitschrift des Südasien Büro Nr. 40

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐக்கிய இலங்கை சாத்தியமா?



'மனிதம் குழு'வின் கருத்துகள் தொடர்பாக சில கருத்துகள்:

'ஐக்கிய இலங்கை' என்ற பதமே தன்க்குள் முரண்பாடுக-ளைக் கொண்டிருப்பதைச் சுட்டு கிறது. முரண்பாடுகள் இல்லை என்றால் 'ஐக்கியம்' என்றபதம் அவசியம் இல்லை. அது அதுவாகவே அதாவது ஒரு பொருளாகவே இருக்கும்போது ஐக்கியம் என்ற சொல் தேவையற்றதாகி விடுகிறது.

'ஐக்கிய இலங்கை' என்னும்போது, இலங்கை ஏற்கென-வே பிளவுண்டு இருக்கிறது என்பது தொக்கு நிற்கிறது. இந்தப் பிளவுண்ட இலங்கையில் நிலவும் முரண்பாடு இதை இரண்டு தனித் தனியான பொருட்களாக்குவது போல இலங்கை, ஈழம் (அல்லது தமிழீழம்) என்று பிரிக்கப்படுவதன் மூலம் தீர்க்கப்படுமா அல்லது அப்படி ஒரு பிளவு இல்லாமலேயே தீர்க்கப்படுவது சாத்தியமா என்பதுதான் அடிப்படையான கேள்வி.

80களின் ஆரம்பத்தில் – இது ஒரு கேள்விக்குரிய பிரச்சினையே அல்ல என்றளவுக்கு வேகமாக எழுந்துவந்த போராட்ட எழுச்சி, 80களின் மத்தியில் தனக்கே உரிய தர்க்க ரீதியான காரணங்களால் தேக்கத்தைச் சந்தித்தபோது ஆங்காங்கே இக் கேள்வி எழுப்பப்படத் தொடங்கியது.

கடந்தகால போராட்ட அனுபவங்கள் உருவாக்கிய தோல்வி மனப்பான்மையிலிருந்தும், எம்மை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை எழுந்ததால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்பட்ட கருத்துப் போராட்டங்களின் மத்தியிலிருந்தும், இந்திய இலங்கை ஒப்பந்தக் காலத்தில் உருவாகிய புதிய சூழல் ஏற்படுத்திய தாக்கத்தாலும் இது பரவலாக விவாதிக்கப்படத் தொடங்கியது.

"அப்பவே சொன்னோம் பாத்தியா?" என்று பழைய இடதுசாரிகள் கொடுப்புக்குள் சிரிக்கலாம். ஆனால் இது தமிழ் மக்களின் தேசிய விடுதலையில் அக்கறை உள்ளவர்கள் மத்தியில் இந்த இடதுசாரிகளின் கண்மூடித்தனமான, சோரம்போன அரசியல் அடிப்படையிலான முடிவுகளோடு ஒன்றாகப் பார்க்கபடக்கூடியதல்ல. மிகவும் காத்திரமாக விவாதிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

'மனிதம் குழு' இந்த விடயத்தைத் தொட்டிருப்பது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

'மனிதம்' குழு' தெரிவித்துள்ள கருத்துகள் தொடர்பாக சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதே எனது நோக்கமாகும்.

"சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் இனவாதப் போக்குகள் பெரிதாக வளர்ச்சியடையாத ஆரம்பக் காலங்களிலேயே இத் தலைவர்கள் 'தமிழீழம்' என்ற கோரிக்கையை முன்வைத்தது..." என்று 'மனிதம் குழு' எழுதும் போது தமிழ்த் 'தலைவர்களின்' பொறுப்பற்ற தனத்தையும், தாம் சார்ந்த வர்க்க நலன்களுக்காகக் குறுக்கு வழிகளில் மக்களைத் திரட்ட அவர்கள் முன் வைத்த ஒரு தேர்தல் கோசம் என்பதையும் விமர்சிக்கிற வேகத்தில், 'தமிழீழம்' முன் வைக்கப்பட்ட காலம் 'இனவாதப்போக்குகள்' கூர்மையடையாத — காலம் எனச் சொல்லிவிடுகின்றனர். இது தவறான ஒரு கருத்தாகும்.

சிங்கள இனவாதத்தின் வளர்ச்சி பேரினவாதமாகி தமிழ் தேசிய இனத்தை ஒடுக்குவதில் மிகவும் தீவிரமான போக்கைக் கொண்டிருந்த காலகட்டம்தான் அது.

தமிழ்த் 'தலைமைகள்' பல்வேறு தீர்வுகளை முன்வைத்து முன்வைத்து தோல்வி கண்டபின் வைத்த முழக்கந்தான் 'தமிழீழம்'. அது காலத்துக்கு முந்தியதா, பிந்தியதா என்பதைவிட அது வெற்றுக் கோசமாக முன்வைக்கப்பட்டது என்பதுதான் பிரச்சினை.

தமிழீழத்தைப் பாராளுமன்றத் தேர்தலுக்கான ஒருகோசமாக அவர்கள் முன்வைத்தார்கள் என்பதற்குமேல் அவர்களிடம் வேறெந்தத் திட்டமும் இருக்



www.tamilarangam.net

கவில்லை. பாராளுமன்றத்திற்குப் போய் அதைப் பேசி வாங்க முடியும் என்று அவர்கள் ஊட்டிய நம்பிக்கையை விடவும் அதிகளவில் 'வௌவால் வரும்' என்று கூறி இந்தியா வாங்கித் தரும் என்ற நம்பிக்கையையே ஊட்டினார்கள்.

இந்தக் கீழ்த்தரமான அரசியல் நடவடிக்கை பெரியளவில் மக்களை ஆகர்ஷிக்கும் ஒன்றாக எடுபட்டது என்றால் அதற்குரிய யதார்த்தமான நிலைமைகள் நிலவின என்றே அர்த்தம்.

சிங்களப் பேரினவாதம் தமிழ்த் தேசிய இனத்தை, அதன் தேசிய அடையாளங்களை சிதைப்பதன் மூலம் அழித்துவிட நினைத்து செய்துவந்த நடவடிக்கைகளைத் தமிழ்த் தலைமைகள் எதிர்கொண்ட விதம் தமது சொந்த வர்க்க நலன்களின் அடிப்படையில் அமைந்தது. அதாவது ஏதாவது சமரசத்தைச் செய்து கொள்வதற்கு அரசை நிர்ப்பந்திக்கிற நோக்கத்திற்காகவே தம்மோடு பரந்துபட்ட மக்கள் சக்தி இருப்பதைக் காட்டுவது. பரந்துபட்ட மக்களைத் தம்பின்னால் திரட்ட தமிழ் கட்சிகட்கு வேறெந்தத் தீர்வையும் விட இலகுவானதாக இருந்தது தமிழீழமே. இது தமிழ் மக்களின் அபிலாசைகட்கு ஒரு மருந்தாக இருக்கும் எனப்பட்டதால் பலத்த ஆதரவு இந்த முழக்கத்திற்குக் கிடைத்தது.

ஆனால் தமிழீழத்தை முன் வைத்தவர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி ஒரு போதும் பேசியதில்லை. பழைய தமிழ்த் 'தலைமைகள்' அதை அப்படி ஒன்று இருப்பதை திம்பு பேச்சுவார்த்தையின்போதுதான் ஏற்றுக்கொள்கின்றன.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது அவர்களைப் பொறுத்தவரை அவ்வளவு முக்கியமானதாக இருக்கவில்லை.

'மனிதம் குழு' குறிப்பிடும் இன்னொரு பிரச்சினை " தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில் பாதுகாப்பாக - வாழ்வதற்கான போராட்டத்தை வலியுறுத்தும் அதேவேளை இதை வெறும் தமிழீழப் போராட்டமாக குறுக்கிவிடமுடியாது" என்பதாகும். இதுவே எனது முக்கியமான பிரச்சினையாகும்.

'மனிதம் குழு' கருதும் 'தமிழீழப்' போராட்டம் எது என்று புரியவில்லை. 'வெறும்தமிழீழப் போராட்டம்' என்பது திட்டமற்ற கூட்டணியால் முன்வைக்கப்பட்டது போன்ற 'தமிழீழம்' என்று அர்த்தப்படுகிறதா அல்லது தமிழீழ விடுதலைக்கானதாகச் சொல்லப்படும் - போராட்டங்கள் அனைத்துமே தவறு என்ற அடிப்படையிலிருந்து சொல்லப்படுகிறதா என்று தெரியவில்லை. பிரதேசத்தைப் பாதுகாப்பதற்காக நடாத்தும் 'பாதுகாப்பு'ப் போராட்டத்தை உயர்த்தியும், 'தமிழீழப்' போராட்டம் அதைவிடத் தாழ்வானது என்றும் சொல்வது

www.tamilarangam.net

போலவே அது தொனிக்கிறது.

இது, தமிழீழப் போராட்டத்தின் தவறான அம்சங்களை விமர்சனத்துக்குள்ளாக்கி அது எப்படி சரியான திசை வழியில் செல்லமுடியும் என்று ஆராய்வதற்குப் பதிலாக, அதன் தவறான பக்கங்களால் அதிருப்தியுற்று, அதைவிடப் 'பாதுகாப்பு யுத்தம்' உயர்வானதெனச் சொல்லுவதாகும்.

'மனிதம் குழு' புரிந்து கொள்ளத் தவறுவது என்னவென்றால் பாதுகாப்பு யுத்தத்திற்கும், தமிழீழத்திற்கும் அடிப்படையில் இருக்கும் வேறுபாட்டையே.

பாதுகாப்பு யுத்தம் எந்த அரசியல் இலக்கையும் கொண்டதல்ல. மாறாகத் தமிழீழப் போராட்டம் ஒரு இலக்கைக் கொண்ட போராட்டமாகும். எமது துரதிஷ்டம் என்னவென்றால், தமிழீழ விடுதலைப் போராட்டம் பாதுகாப்புப் போராட்டத்திற்கு அப்பால் வளர முடியாமல், திரும்பத் திரும்பத் தேக்கத்திற்குள்ளாகி வருவதே.

தமிழீழப் போராட்டமே யதார்த்தத்தில் பாதுகாப்புப்-போராட்டமாகக் குறுகியுள்ளது. 'மனிதம் குழு' சொல்வதுபோல பாதுகாப்புப் போராட்டம் தமிழீழப் போராட்டமாக குறுகிவிடவில்லை.

ஆனால் இதில் 'மனிதம் குழு'விடம் இருக்கக்கூடிய இன்னொரு ஆபத்தான சிந்தனையையும் நாம் கவனிக்க வேண்டும்.

அதாவது கடந்தகால 'மரபுவாத' இடதுசாரிகளால் பேசப்பட்டுவந்த 'தேசிய ஒருமைப்பாடு, இன ஐக்கியம்' என்ற கற்பனாவாதக் கோட்பாடுகளின் அடிப்படையில் நின்று 'தமிழீழப் போராட்டம்' ஒரு குறுகிய – நோக்கமுள்ளதாக குற்றம்சாட்டப்படவும் முடியும்.

அவர்களுக்கு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் சரியானது, நியாயமானது. ஆனால் தமிழீழம் கோருவது இனவாதமாகும். அதாவது ஒற்றை ஆட்சி அமைப்புக்குள் போராடலாம், பிரிந்து போவது பற்றி பேசக்கூடாது! இந்த விசித்திரக் கோட்பாட்டின் தொனியும் கூட 'மனிதம் குழு'வின் கருத்தில் தொனிக்கத்தான் செய்கிறது.

"நீங்கள் போராடுங்கள். உங்கள் போராட்டம் நியாயமானது. போராடுவது உங்கள் உரிமை. ஆனால் நீங்கள் எல்லை மீறிப் போகக்கூடாது. பாரம்பரிய பிரதேசத்தில் பாதுகாப்புக்காகப் போராடுங்கள். அதை மீறி விடவேண்டாம்" என்ற கருத்து, காங்காலமாகத் தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தையல்ல, பாதுகாப்புப் போராட்டத்தையே நடாத்தும்படி கூறுவதாகும்.

இனவாத அரசும், அதன் இருப்புக்கான அடிப்படைகளும் உடைக்கப்படாமல் எந்த மாற்றமும் நடக்கப் போவதில்லை என்பதையும், அதை உடைக்கும் சக்தி பாதுகாப்புப் போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராட்டத்திற்கு அல்ல, விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமேயுள்ளது என்பதையும் 'மனிதம்குழு' மறந்துவிடுவது வியப்புத்தான்!

தமிழ் மக்களின் போராட்டம் என்கிறபோது வருகிற மக்களும், யுத்தத்தின் கொடுமை தாங்காமல் சிங்கள மக்கள் மத்தியில் வாழவும் தயாராகவுள்ள 'மக்களும்' ஒன்றுதானா?

'மனிதம் குழு' தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்குமிடையில் பிளவு ஏற்பட்டு அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது 'கண்களில் தீப்பொறி பறக்கும்' என்றளவுக்குப் பகைமையுணர்வு கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதுபோன்ற ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. அதனால்தான் அவர்களுக்கு சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் வாழத் தயாராயுள்ளனர் என்பது பெரிய விடயமாகப் படுகிறது.

ஆனால் உண்மையில் 83 கலவரத்தின் பின்னும் 'தமிழ்மக்கள்' சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்துகொண்டுதான் வருகிறார்கள். இதில் எந்தப் புதுமையும் இல்லை. ஏன் தமிழீழம் உருவாகிய பின்னும்கூட வாழக் கூடும். இங்கே பிரச்சினை இனவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவது சிங்கள மக்கள் அல்ல. சிங்கள மக்கள் சிங்களப் பேரினவாத சித்தாந்த ஆதிக்கத்துள் இழுக்கப்பட்டிருப்பதால் தமிழினம் மீதான அரசின் ஒடுக்குமுறை எதிர்ப்பற்ற ஒன்றாக இருக்கிறது என்பதுதான் முக்கியமானது. தெற்கிற்குத் தமிழர்கள் யுத்த அகதிகளாக வந்தால் சிங்கள மக்கள் மத்தியில் அவர்கள் தற்கா

### வானாவும், போனாவும்.



"எங்கடை முன்னாள் விடுதலை இயக்கங்கள் எல்லாம் ரஞ்சன்ரை புதவுடலுக்கு மலர் வளையம் வைச்சிருக்கினம். நல்ல மனிசரை இழந்துபோனோமேயெண்டு அழுதிருக்கினம்"

"மக்களின்ரை உயிரை அழிச்சாலும் தங்கடை உயிருக்குப் பாதுகாப்பு அளிச்சபடியால் பாதுகாப்பமைச்சருக்கு தங்கடை செஞ்சோற்றுக்கடனை இந்த இயக்கத் தலைவர்மார் காட்டியிருக்கினம். உப்பிட்டவரை உள்ளளவும் நினையெண்டுமிருக்கும்"

இன்னன்னா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லிகமாக 'நிம்மதி'யாக இருக்கலாம். ஆனால் இந்த 'நிம்மதி'யும், விடுதலைப் போராட்டத்தின் பின்வரும் நிம்மதியும் ஒன்றல்ல.

தமிழீழ விடுதலைப் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரான ஒரு போராட்டம் அல்லவே. இன்றைய 'தலைமைகள்' சிங்கள மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தியிருப்பது உண்மையாயினும், அது தமிழீழப் போராட்டத்தின் தவறான வழிமுறைகளை சுட்டிக்காட்டுமேயொழிய, 'தமிழீழத்திற்கான போராட்டம் அவசியமில்லை' என்ற முடிவுக்கு வரப் போதுமானதா?

'தேசிய விடுதலைப்போராட்டம்' என்ற சொற்றொடரைப் பாவிக்காமல் 'தமிழீழப் போராட்டம்', 'பாதுகாப்பு போராட்டம்' என்றுகூறி எங்கே 'தமிழீழப் போராட்டத்தை' யாராவது இன ஐக்கியத்திற்கு எதிரானது என்று கருதிவிடுவார்களோ என்ற அச்சத்துடன் 'மனிதம் குழு' நிரூபிக்க விரும்புவது எதை? தாம் 'இனவாதிகள் அல்ல' என்பதைத்தானா?

இதுவரை காலப் போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டம் அல்ல, வெறும் தமிழீழப் போராட்டம் தானென்றும், அது மிகவும் குறுகியதென்றும் 'மனிதம் குழு' விவாதிக்கவிரும்புகிறதாவென்று தெரியவில்லை. ஆனால் திரும்பத் திரும்ப "தமிழ் மக்கள் தமது பாதுகாப்புக்காகப் போராடுவது நியாயமானது" என்பதற்கு மேல் எதையும் அவர்கள் சொல்லவில்லை. தமிழ் மக்கள் தமது பாதுகாப்புக்காகப் போராடுவது நியாய, அநியாயங்களுக்கு உட்பட்டதா என்ற பிரச்சினை காலங் கடந்த ஒன்று. இப்போதுள்ள பிரச்சினை அவர்கள் 'தேசிய விடுதலைப் போராட்டத்தை' (கவனிக்கவும்– விடுதலை; பாதுகாப்பு அல்ல) நடத்துவது நியாயமானது என ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பதே.

'மனிதம் குழு', தமிழ்மக்கள் பாதுகாப்புக்காகப் போராடுவது நியாயமானது என்று சொல்வதும், அதைச் சிங்களமக்கள் ஏற்கவேண்டும் என்று கேட்பதும், சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய 'புரட்சிகரசக்திகளை'யிட்டு ஒரு கற்பனா ரீதியான கண்ணோட்டத்துடன் வைக்கப்படும் கருத்துகளேயாகும்!

தற்போதுள்ள நிலையை மாற்ற 'மனிதம் குழு' முன்வைக்கும் தீர்வு: (1) சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் தேசிய வெறியையும், (2) தமிழ் மக்கள்மத்தியில் நிலவும் குறுந்தேசியவெறியையும், (3) முஸ்லீம் அடிப்படைவாதத்தையும் எதிர்க்கும் 'புரட்சிகர சக்திகள்' முனைப்படைய வேண்டும் என்பதே.

'மனிதம் குழு'வின் ஐக்கிய இலங்கை சாத்தியமாவென்ற கேள்விக்கான பதிலை மேற்சொன்ன புரட்சிகர சக்தி முனைப்படைந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கிறவிதத்

www.tamilarangam.net

தில் தீர்வுகளை முன் வைப்பதன் மூலம் சாத்தியம் என்று முடித்துள்ளார்கள்.

ஐக்கிய இலங்கை தான் தமது தீர்வு என்பதை அடித்துச் சொல்லாமல், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 'பாதுகாப்புயுத்தத்தை நடாத்து' என்று கூறி அதற்கும் ஒரு வழி சொல்லாமல், மொத்த இலங்கைப் புரட்சி பற்றியும், அது எப்படி தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வினை முன்வைக்க முடியும் என்றும் சொல்லாமல் எல்லாவற்றையும் தொட்டுவிட்டதுபோல எழுதப்பட்ட இந்தக் கட்டுரையில் வலியுறுத்தப்பட்டது 'பாதுகாப்பு யுத்தம் நடத்த தமிழ் மக்களுக்கு உரிமையுண்டு' என்பது மட்டுமே!

சரி, மேலே இவர்கள் கூறிய சிங்கள 'தேசிய வெறியையும்', மற்றும் குறுந்தேசியவெறி அடிப்படை வாதங்களையும் எதிர்ப்பது எப்படி? இவற்றை எதிர்த்து வரப்போகும் புரட்சிகரச் சக்திகளின் கருத்துகளில் ஒன்றாக 'தமிழ் மக்கள் தமது பாதுகாப்புக்குப் போராடுவது சரியானது' என்று இருக்கும் என்பதுதான் 'மனிதம் குழு' வினரின் கருத்து. சரி, அந்த 'நியாயமானது' என்ற கருத்தினை சிங்கள மக்கள் ஏற்கச் செய்வது எப்படி? பேரினவாதத்திற்கு எதிராகப் பாதுகாப்புப் போராட்டத்தை நியாயப்படுத்துவதால் அதைத் தகர்த்துவிடமுடியுமா? 'மனிதம் குழு' தான் பதில் சொல்லவேண்டும்.

'மனிதம் குழு'வால் எழுப்பப்பட்ட கேள்விக்கு வருவோம். ஐக்கிய இலங்கை சாத்தியமா? ஆம்! சாத்தியம். ஆனால் அது தற்போதுள்ள யதார்த்தச் சூழ்நிலையைக் கணக்கிலெடுத்தால், தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியோடு சம்பந்தப்பட்டது என்பதே உண்மை.

சிங்களப் பேரினவாத அரசின் இருப்பு பௌத்த சிங்கள பேரினவாதத்தையே தனது அத்திவாரமாகக் கொண்டிருக்கின்றது. அது தகர்க்கப்படாதவரை இந்த அரசை ஆட்டம் காணச் செய்யமுடியாது. நிறுவனமயப்படுத்தப்பட்ட பேரினவாதம் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை எந்தத் தயக்கமும் இன்றி இப்போது நியாயப்படுத்துவதற்கு முடியும். பௌத்த பேரினவாதத்தின் சிந்தனை மேலாதிக்கத்தின் கீழ் உள்ள சிங்கள மக்கள் மத்தியிலிருந்து தமிழ் மக்களின் கண்ணோட்டத்தை அவர்களின் கண்ணோட்டத்திலிருந்து புரிந்துகொண்டு தீர்க்கும் சக்திகள் உருவாகிவருவது முயல் கொம்பாகும். தப்பித் தவறி அத்தகைய கருத்துகளைக் கொண்டவர்களும் சிங்களப் பேரினவாத, பாஸிஸ அரசினை எதிர்த்து தமது கருத்தை முன்வைத்து போராடுவதற்குரிய வாய்ப்புகள் மிக மிக அரிது — இல்லையென்றே சொல்லுமளவிற்கு!!

மொத்த இலங்கையின்

www.tamilarangam.net

புரட்சிக்கான திட்டம் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வினை முன்வைத்துத்தான் ஆகவேண்டும். அதுவே பிரதான முரண்பாடாக இன்னமும் இருந்துவருகிறது.

தமிழ் மக்களின் சுயநிர்ணயவுரிமையை வழங்குமாறு இயக்கம் நடத்தவும், இலங்கையின் புரட்சியுடன் அதை இணைக்கவும் சக்தி வாய்ந்த ஒரு புரட்சிகர அரசியல் அமைப்பு இல்லாத நிலையில் தமிழ் தேசிய இனம் தனது சகிக்கமுடியாததாகிவரும் வாழ்நிலையில் தனது சொந்த விடுதலைக்கான யுத்தத்தில் குதிப்பது தவிர்க்க முடியாததே.

உண்மையில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் அதன் சொந்தத் தவறுகளை களைந்து கொண்டு புரட்சிகரப் பாதையில் முன்னேறும்போதுதான் சிங்கள மக்கள் மத்தியிலும், சிங்களப் புரட்சிகரச் சக்திகள்மத்தியிலும் பேரினவாத சிந்தனாதிக்கத்திலிருந்து விடுபடும் வாய்ப்புண்டு. அதுவரையும் அத்தகைய வாய்ப்புகள் இல்லையென்றே – சொல்லவேண்டும். சரியாகச் சொன்னால் முழு இலங்கையினதும் விடுதலைக்கு தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலை ஒரு முன் நிபந்தனையாக உள்ளது. தமிழ் தேசிய இனம் விடுதலை பெறுவதே சிங்கள இனத்தினதும் விடுதலையைச் சாதிக்கும்.

இனி, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை என்பது பாது காப்புப் போராட்டத்தை நடத்துவதல்ல; மாறாக விடுதலை யுத்தத்தை நடத்துவது, பிரதேசத்தையும், மக்களையும் விடுவிப்பது. இத்தகையதொரு போராட்டம் தற்போதைய தலைமைகளால் ஒருபோதும் சாத்தியமில்லை. அதற்கான புதிய தலைமையைக் கட்டுவதே நம்முன்னுள்ள பணியாகும்.

ஒருக்கால் தமிழ்த்தேசிய இனம் விடுதலை பெற்றால், அதன்பின் சம அந்தஸ்து கொண்ட இரண்டு தேசிய இனங்களுக்கிடையிலான பரஸ்பர அங்கீகாரத்துடனான "ஐக்கியம்" சாத்தியம். இலங்கை இரண்டு நடாவதா இல்லையா என்பதை அப்போது தான் தீர்மானிக்கமுடியும்! தமிழ் மக்களின் போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமேயொழிய அது "பிரிவினை" வாதம் அல்ல. பிரிய வேண்டும் என்பதற்காகவே பிரிவதல்ல இது; விடுதலைக்காகப் பிரிவது! ●

## மு.அ.பாலசுகரலிங்கம் (ஈழம்)

(நிழம்ப வேண்டாம் .... (தொடர்ச்சி)

தூண்டில் உடனே வேலைத்திட்டத்தை வகுக்க வேண்டும், அல்லது நிற்பாட்ட வேண்டும் என்ற கருத்தானது ' தலைக்கு உடனே தலைப்பாகையை வையுங்கோ இல்லாட்டி தலையை வெட்டி எறியுங்கோ' என்ற மாதனமுத்தா பாணியிலான கருத்துக்கு ஒப்பானதாகும்.

●

செல்வக்கண்டு

www.tamilarangam.net

# மனிதமும் மரணமும்

போர்க்குரல் எழுப்பி
பனை மரங்கள்
உறக்கம் கலைக்கும்.

கட்டாக்காலி மாடுகள்
மேச்சலுக்காய்
பனம்பழங்களை சூப்பும்.

உரசும்
ஈரம் காய்ந்த பனை ஓலைகளும்
கள்ளு முட்டிகளைப் பாதுகாக்கும்.

அவள்
கிழிந்த சட்டையோடு
கடைவாயையும் துடையாமல்
பித்தல் கடகத்துடன்
குறைப் பாத்தியை நிரப்பிவிடும் எண்ணத்தில்
பனங் காணிக்குள் அலைவாள்.

பீரங்கிகளின் கொலைக் கண்கள்
சிவக்கச் சிவக்க முழித்திருந்ததில்
வட்டுக் கழுத்தோடு தலைகள் சிதைந்தும்
மார்புகள் முறிந்து தொங்கியும் போன
பனை உடல்களை விலத்தி
அவள் ....

●

சிவதரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பார்வை

அன்புள்ள செல்வன்,

உனது கடிதமும், "சிதைந்த சித்தாந்தங்கள்" என்ற புத்தகமும் கிடைத்தன. எனது நலத்துக்காய் ஆண்டவனை வேண்டியிருந்தாய். இங்கு ஆள்பவர்களே எங்கள் நலனை நிச்சயிக்கிறார்கள் என்பதனை நீ அடிக்கடி மறந்து விடுகிறாய். நீ ஜேர்மெனியில் — காலூன்றிக் கொண்டிருக்கிறாய் என்பதையே உனது மறதி எனக்கு நினைவுபடுத்துகிறது. நிற்க,

கடந்தவாரம் உனது அம்மாவையும், தம்பியையும் கண்டேன். அவர்கள் அகதி முகாமில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இக் கடிதம் எழுதும்வரை நானும் உயிரோடிருக்கிறேன் என்பதுதான் இன்றைய செய்தி. அடுத்த கணத்துக்குள் என்ன நடக்கும் என்று தெரியாதநிலையில் தான் இங்கு மக்கள். இந்தக்கடிதத்தின் மீதிப் பகுதிகளை நீயனுப்பிய 'சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய கழக'த்தின் "சிதைந்த சித்தாந்தங்கள்" என்ற புத்தகத்தின் விமர்சனத்துக்கு ஒதுக்குவதையே விரும்புகிறேன். இப்புத்தகத்திலுள்ள பொய்மைகளையே இங்கு பிரதானப்படுத்தியுள்ளேன்.

"சிதைந்த சித்தாந்தங்கள்" என்ற தலைப்பைப் பார்த்துவிட்டு என்னவோ, ஏதோவென்று மண்டையைப் பிராண்டினேன். இலங்கையில் தமிழ் பேசும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்கள் மீதான பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறையையும் இன அழிப்பு நடவடிக்கைகளையும் நீக்குவதாக தமிழ் பேசும் அனைத்து மக்களினதும் பிரதிநிதிகளாக இன்றுவரை உலா வந்த, வந்துகொண்டிருக்கின்ற கட்சிகள் தொடக்கம், இயக்கங்கள் வரையிலும் பிரசுரித்த துண்டுப் பிரசுரங்களும், சுவரொட்டிகளும், விட்ட அறிக்கைகளுமே இவர்கள் பாசையில் சித்தாந்தங்கள் என்பதைக் கண்டுபிடிக்க எனக்குஒரு வாரத்திற்கு மேலாயிற்று.

இப் புத்தகத்தை படிக்க



# புழுத்த புண்ணுக்கு புனுகு மருந்தாகுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடங்கியதுமே தமிழீழமக்கள் விடுதலைக் கழக(புளொட் PLOT) சார்பிருப்பது தெரிந்துவிடுகிறது. இலங்கையில் சில சந்தர்ப்பங்களை வரலாறு செய்து, அதில் கொல்லப்பட்ட அல்லது இறந்துபோன எல்லோரையும் தியாகிகள்/தோழர்கள்/மா வீரர்கள் என்பது எனக்கு உடன்பாடானதல்ல.

குறித்த புத்தகத்தில் "அமரர் உமாமகேஸ்வரன்", தோழர் கண்ணன்", "தோழர் வாசுதேவா" என்று குறிப்பிடப்பட்டவர்கள் உட்பட புளொட்டின் இன்றைய இராணுவத் தலைவர் மாணிக்கதாசன் வரை இந்தத் தலைவர்கள் அனைவருமே ஒரு தலைவர் எப்படி இருக்கக்கூடாதென்பதற்கான சிறந்த உதாரணங்கள். இவர்களது நடைமுறைகள் அனைத்தும் மனித நேயத்துக்கு முரணானவை என்பதில் எனக்கு உறுதியான நிலைப்பாடு உண்டு.

சிலவேளை இப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தோழர்கள்" என்ற பதம் "மிஸ்ரர் (Mr.) என்பது போல என்றால் அபிப்பிராயபேதத்துக்கு இடமில்லை.

இங்கே எனது விமர்சனத்துக்காக முதலில் புளொட்டை எடுத்துக் கொள்கிறேன். அது எனது உருத்தும் கூட(!).

ஆயிரக்கணக்கான இளைஞர்களை 'றோ'வினது கையாட்களின் பொறுப்பில் அடைத்து வைத்து செய்த சித்திரவதைகள் தான் பயிற்சிகளும், தத்துவங்களுமோ?

ஒரு பயிற்சியாளனுக்கு இவ்வளவு என்று இந்திய அரசு கொடுத்த பணத்தில் இலங்கையிலிருந்து கடத்திவரப்பட்ட புதுரக ஜீப்புகளில் இத் தலைவர்கள் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பவனி வந்து சாதித்தது கழகத்தில் இணைந்த இளைஞர்களை நம்பிக்கை இழக்கச் செய்ததும், ஒதுங்கச் செய்ததும், மனநோயாளிகளாக்கியதும், கொன்று புதைத்ததும்தான். தஞ்சாவூர் ஆர்.எம்.எச் வைத்தியசாலையினதும், ஒரத்தநாடு தனம் தனியார் மருத்துவமனையினதும் பதிவேடுகள் பல உண்மைக்கதைகள் சொல்லும்.

பாலா,
வசந்த்,
றிச்சார்ட்.

படித்தவர்(?), ஆங்கிலம் பேசுவார் என்பதால் தலைவர் ஆகிப்போன உமாமகேஸ்வரனை கழகத்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்று முதலில் முயன்றவர் சுந்தரம். பின்னாளில் சுந்தரம் வழிவந்தவர்கள் என்று பாட்டுப் பாடியவர்கள் உமாமகேஸ்வரனின் பாட்டுக்குத் தாளம் போட்டதற்கு இயலாமை, உமாவை அறியாமை, தத்துவ வறுமை கார

www.tamilarangam.net

ணங்களாக இருப்பினும், தொடர்ந்தும் தங்களைத் தத்துவரீதியாக வளர்த்துக்கொள்ள மறுத்தபடி, தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை இவர்களும் சேர்ந்தே நாசமாக்கினர்.

அளவான தாடியும், பெரிய மீசையும், அமர்த்தலான சிரிப்பும், அமசடக்கான பார்வையும்தான் தலைவர்கள் என்று குறுகிப்போனதால் இவர்களை இனங்கண்டுகொள்வதும் சிரமமாகிப் போனது!

இயக்கியங்களின் ஐக்கியத்தைச் சிதைத்தவர்கள் புலிகளே என்று புத்தகத்தில் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறார்கள். புலிகளுக்கும் இதில் பங்குண்டு என்றாலும் புலிகள் மட்டுமே இதைச் செய்தவர்கள் என்பது உண்மையாகாது.

1984 அனைத்து இயக்கங்களினதும் அடிமட்டப் போராளிகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், அரவணைத்துக் - கொள்ளவும் வேண்டிய தேவை-யையுணர்ந்து அதன் முன்னெடுப்பு போல் சிரித்துக் கொள்வதும், சுற்றுமுற்றும் பார்த்து ஒரு சில வார்த்தைகளைப் பேசிக்கொள்வதுமான ஒரு சூழல் உருவாகியிருந்தபோது அதைச் சூறாவளி-யாகச் சிதைத்த " சுழிபுரம் கொலைகள்" (புலி இயக்கத்தை சேர்ந்த சிறுவர்கள் உறுப்புகள் அறுக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் கோரமாகச் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர்) உமாமகேஸ்வரனும், படைத்தளபதி கண்ணனும் தளத்தில் இருக்கையிலேயே நடந்தது. இவை ஏதோ தற்செயலாக நடந்தது என்றுதான் இன்றுவரையிலும் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு 4 மாதங்களுக்கு முன்னரே இக்கொலைகளைச் செய்வதற்குஒரு குழு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்த நாட்டிலிருந்து மீரான்மாஸ்ரர் தலைமையில் வேதாரண்யம் கடற்கரைவரை சென்று தோணிக்காகக் காத்திருந்து, அதேநாளில் இலங்கை இராணுவத்தால் சுழிபுரம் சுற்றிவளைக்கப்பட்டதாகத் தகவல் வந்ததால் ஒத்திப் போடப்பட்டவை என்பது யாருக்குத் தெரியும்.

ஏதோ முறைத்தார்கள் என்பதற்காக 15பேர் வரையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கப் போராளிகளைத் துரத்திப்பிடித்து அடித்துத் துன்புறுத்தி வீடியோப்படம் எடுத்து „விடுதலை" யை இன்னும் கொஞ்சம் முன்னுக்கு தள்ளியதெல்லாம் சிலருக்கு பழங்கதையாகலாம். அதன் தொடர்ச்சியும், வளர்ச்சியும் இன்று எத்தனை போராளிகளை பலிகொண்டு நிற்கிறது?

கிளிநொச்சியில் நடந்த பாசறையில் புளொட்டின் மூலோபாயம், தந்திரோபாயம் கேள்விக்குட்படுத்தப்பட்டபோது அப்படி ஒன்றே இருக்கவில்லை என்பதே பதிலாகிப் போனது. தளத்தில் கூடப்பட்ட மகாநாட்டில் தங்கள் நிர்வாணங்களைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல மேல்மட்டங்கள் ஒப்புக் கொண்டாலும் தலைமைகள் தங்களைப் பேணிக் கொள்வதிலே-யே அக்கறை காட்டின. அரசியற் பிரிவையும், இராணுவப்பிரிவையும் தனித்தனியாக வளர்த்து இரண்டு பிரிவுகளையுமே ஒன்றைவிட ஒன்று மேலானது என்றுகூறி கடைசிவரையும் இணையாமல் - பார்த்துக்கொண்ட புளொட் தலைமையின் சூழ்ச்சியை நீ அறிவாயா?

வங்கம் தந்த பாடம் மூலமாக இந்தியா பற்றி உமா மகேஸ்வரனும், புளொட்டும் எச்சரிக்கை செய்ததாக இப் புத்தகத்தில் அடிக்கடி புளுகியிருக்கிறார்கள். அச்சடிக்கப்பட்ட வங்கம் தந்த பாடம் உமாவினால் நேரடியாகத் தடை செய்யப்பட்டதுடன், பிரதிகளும் முடக்கப்பட்டன. இதைவிட இந் நூலைக் கொண்டுவருவதில் முனைப்பாக நின்ற சந்ததியார் இந்திய உளவுப்படைகளின் ஆலோசனையின்படி உமாவின் தொண்டர் படையால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டமை உண்மையைச் சொல்லும்.

கொஞ்சம் இறுக்கமாக எழுதப்பட்ட "பாவல்" என்ற சஞ்சிகை முதலாவது இதழிலேயே கைவிடப்பட்டதுடன், 'உட்கட்சிப் போராட்டம்' என்னும் சிறு மொழிபெயர்ப்புக் கைநூல் முகாம்களில் படித்து விட்டுப் பிரச்சினை கொடுக்கிறார்கள் என்பதால் திருப்பி எடுக்கப்பட்டது.

புலி மட்டுந்தான் இந்தியாவின் செல்லப்பிள்ளையாகவிருந்தது என்று இந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதன் மூலம் ஏனைய செல்லப்பிள்ளைகளைக் கச்சிதமாகவே மறைத்திருக்கி-றார்கள்.

இந்திராகாந்தியுடன் உமாவுக்கு மட்டுந்தான் தொடர்புண்டென்று புளொட்டினர் மார்தட்டிக்கொண்டபோதுதான் (இப்படித்தான் ஒவ்வொரு இயக்கத் தலைவர்களும் சொல்லிக்கொண்டார்கள்) 4கோடி இந்திய ரூபா பெறுமதியான (தொகை கூட இவர்கள் சொன்னதுதான்) ஆயுதங்கள் சுங்கப் பகுதியில் பிடிபட்டு அதை மீட்கவென இந்த மறவர்கள் சாதாரண சுங்க அதிகாரியை மடக்கி அவரது மகனைப் பணயம் வைத்து.... என்று புகுந்து விளையாடிப்போட்டுடைத்தார்கள்.

புலிகளும், ஈரோஸும் எம்.ஜி.ஆர். இடம் 4 கோடி ரூபா வாங்கிக் கொண்டார்கள் என்று மட்டுமே புத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். 83,84களில் அ.தி.மு.க. வருவாய்த்து-றை அமைச்சராயிருந்த எஸ்.டி சோமசுந்தரத்திடமிருந்து தாங்கள் கையூட்டுப் பெற்று வந்ததை சாமர்த்தியமாகவே புத்தகத்தில் மறைத்திருக்கிறார்கள்.

நாகபடை என மட்டக்களப்பில் ஸ்தாபிக்கப்பட்ட இயக்கத்தின் ஸ்தாபகரான ராஜ்மோகன் சென்னையில் உள்ள சூளை எனும் இடத்தில் வைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமையின் முடிவின்படி வாமதேவனால் சுட்டுக் கொல்லப்பட்டதும், தஞ்சாவூரில் தட்சணாமூர்த்தி எனும் பண்ணையார் சுட்டு கொல்லப்பட்டதும், உளவுப்படையின் பொறுப்பாளராக இருந்து எண்ணற்ற கொலைகளைச்செய்த சங்கிலி எல். ரி. ரி. ஈ. யினால் அண்மையில் முள்ளிக்குளத்தில் — கொல்லப்படும்வரைக்கும் தலைமைக்குள் இருந்ததும் மறைக்கப் படலாம். எங்களால் மறக்க முடியுமா?

நிக்கரவெட்டியா கொலையும், கொள்ளையும் (தாக்குதல் என்று இப் புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பது பெரிய அநியாயம். வழி காட்டியவனையும், வழியில் தூங்கிக் கொண்டிருந் தவனையும் கொன்றதுதான் இவர்களது 'தாக்குதல்') கொலையுண்ட பொலிசாருக்கு அஞ்சலி என்று பிரசுரங்கள் பகட்டாய்ப் பறக்க, நிதிப் பொறுப்பு உமா மகேஸ்வரனின் மனைவியிடம் கை மாறி இவர்களின் உண்மையான நோக்கங்களைப் புலப்படுத்தின.

ஒவ்வொரு சிறு அசைவினூடாகவும் கழகத்தைத் தோலுரிக்க "புதியதோர் உலகம்" மாத்திரம் போதாது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பற்றி முடிக்குமுன் இறுதியாக ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது.

இந்தியாவிலிருந்து தளத்திற்கு அனுப்பப்பட்ட ஒருவரிடம் அவரின் வருகைக்கான காரணத்தை பொறுப்பாளர் கேட்ட போது கிடைத்த பதில் "பெரியையாவுக்கு தேன் எடுக்க வந்தேன். வவுனியாத் தேன் அவருக்கு நல்ல விருப்பம்" என்பதே.

ஆரம்ப காலங்களில் கழகத்தின் தோணிகள் அடிக்கடி கடற்படையினால் மூழ்கடிக்கப்பட்டதை நினைத்துப் பார். எந்தப் போராளி பெரியைய்யாவுக்கு (உமாவுக்கு) தேன் எடுக்க வந்து அநியாயமாகக் கொல்லப்பட்டானோ?

என்னடா இப்படி எல்லாம் கழகத்தைப் பற்றி எழுதுகிறானே, புளொட்டை விட ஏனைய இயக்கங்கள் பரவாயில்லையோ என்று மாத்திரம் நினைத்து விடாதே. எங்கள் அப்பு அடிக்கடி சொல்லுவார் "கொழுக்கட்டைக்கும், மோதகத்துக்கும் உள்ளுடல் ஒன்று, வடிவமும், பெயரும்தான் வேறு" என்று. நான் உயிருடனிருந்து, முத்திரைக்குக் காசும் இருந்தால் அடுத்த கடிதத்தில் ஏனைய இயக்கங்கள் பற்றிய எனது அனுபவங்களையும் கருத்துகளையும் எழுதுகிறேன்.

இப்படிக்கு,
அன்புடன்
அகிலன்

---

கலசம் 39இனதும், இக் கலசத்தினதும் முன்னட்டைப் படங்கள் வரைந்தவர் ஜீவன்.

www.tamilarangam.net

## வாசகர் கடிதங்கள்

தமது மனம்போனபோக்கில் புலிகளைத் தேசிய சக்திகளாகவும், தேசியத்தன்மைக்கு இலட்சணையாகவும் காணும் (எமது தேசத்தின் பிரஜைகள்) சிலரால் ".. புலிகளைத் தனிமைப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிடவும் அரசு தீவிரமாக இயங்குகிறது.." என அங்கலாய்க்கவும், இயக்கங்களின் பேச்சாளர்கள் போல் எப்படி அச்சொட்டாக இன்னமும் பேசவும், எழுதவும் முடிகிறதோ தெரியவில்லை.

"தேசிய விடுதலைக் கருத்தேற்பு வாயிலாக இவ்வியக்கங்கள் மாக்ஸிஸத்தை நண்ணின. காலஞ் செல்லச் செல்ல தீர்க்கமான மாக்ஸிஸ உன்னத குறிக்கோள் தத்துவ மயமான இயக்கங்கள் தலைதூக்க ஆரம்பித்தன..." என்று 'தமிழ்த் தேசியமும், சமுதாயக் கொந்தளிப்பும்' எனும் பிரசுரத்தில் (ஈரோஸ் வெளியீடு, 1986) கா. சிவத்தம்பி ஓங்காளித்த அதே புத்திஜீவித வாந்தியைத் தான் இன்று இந்தப் 'பிரஜைகளும்' கக்குகிறார்கள்.

ஏகாதிபத்தியச் சார்பு எதிர்ப்புரட்சிகர யுத்தத்திற்கும் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குமுள்ள இணக்கம் காணமுடியாத முரண்பாட்டை இன்று உயிரோடிருந்து உணர மறுப்பவர்கள் சிவத்தம்பியும், இந்தப் 'பிரஜைகளும்' தான்.

இவர்களுக்கிடையில் நல்ல உறவு இருக்கலாம்!

போரின் பயங்கரங்களாலும், திடுதிப்பென உண்டாகும் அழிவுகளாலும் புத்திஜீவிகள் ஏகாதிபத்திய சார்பு எதிர்ப்புரட்சிகர யுத்தத்தை நியாயப்படுத்துவதும், அதன் கொலைத்தொழிலுக்கு உடந்தையாக இருப்பதும், அதில் ஆதாயம் தேடிக் – கொள்வதும் எங்கும் நிகழக்கூடியதுதான் – இது அல்லாவிடில் அது சரி என்ற ரீதியில். அம்பலப்படுத்தப்பட்டு தூக்கி வீசப்படும் நவபாஸிஸ சக்திகளைக் காப்பாற்ற 'ஐக்கிய முன்னணி' கோரும் தருப்பைப்புல் அமைப்பிதழ்கள் இனி நெருப்பிற்குள் போடப்படும்.

"சிங்களவர் மத்தியில் ஜே. வி. பி/டி. ஜே. வி. பி. யாக

www.tamilarangam.net

இருந்தாலென்ன அல்லது தமிழர் மத்தியில் எல்.ரி.ரி.யோ அல்லது வேறு தீவிரவாதக் குழுக்களாக இருந்தாலென்ன அவை நிலைகொண்டு ஆதிக்கம் பெறுவதை நாம் அனுமதித்தோமானால் நாடு இன்னும் இருண்ட அரசியல் சூனியத்தை நோக்கி தான் செல்ல நேரும்.." என்ற தோழர் தயபால திராணகமவின் எச்சரிக்கையானது எங்கும் வெளிக்கொணரப்படவேண்டும்.

..... —நிமலச் சந்திரன்

*

தூண்டில் ஒரு நடுநிலையான சஞ்சிகையல்ல, அராஜக இயக்கங்களுக்கு எதிரானதும், மனிதயுரிமையை நிலைநாட்டவும் பாடுபடும் ஒரு சஞ்சிகை. ஆனால் நீங்கள் எதிர்ப்புகளை காட்டும் பாணிதான் மாறுபட்டு காணப்படுகிறது. தூண்டில் பல கருத்துகளைப் பல வடிவங்களில் தமிழ் மக்கள் முன் வைத்தாலும் துணிச்சலாக எழுதிவரும் ஒரு சஞ்சிகை இதுதான் என்பதை மறுப்பதற்கில்லை. தொடர்ந்து உங்கள் பணி ஈழத்தின் ஜனநாயக, மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கட்டும்.

..... —எட்வேட்

*

தூண்டில் கலம் 38 வாசித்தேன். தூண்டிலின் ஆரம்பக் காலத்திலிருந்து இன்றைய கலம் வரை தனியே புலிகள் பற்றிய துதான்.

எழுதுவதற்கு எத்தனையோ நல்ல விடயங்கள் இருந்த போதிலும் அவற்றைத் தவிர்த்து மனித உணர்ச்சிகளின் அந்தரங்கங்களையும், ஆபாசங்களையும், தூசனங்களையும் தூண்டில் எழுதமுற்பட்டது கவலைக்குரிய விடயமாகவுள்ளது.

பார்த்திபனின் ஆண்கள் விற்பனைக்கு, வித்தியாசப்படும் வித்தியாசங்கள் வரிசையில் கனவை மிதித்தவன் மிகவும் கீழ்த்தரமாகவுள்ளது. எல்லோரும் ஏறி இளைத்த குதிரையிலே கடைசியில் பார்த்திபன் ஏறிவிட்டார் — போலும்!

.... —க. சுதர்சன்

*

வெளிநாடுகளில் இருக்கும் கருத்துச் சுதந்திரத்தை இனங்கண்டு இங்கும் தமது மூக்கை நுளைத்து விசச் செடிகளை நட்டுவிடத் துடிக்கும் கயமைத்தனம் இனி எடுபடப் போவதில்லை.

மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் மனிதர்களை 'பிரஜைகள்' என்ற பெயரில் ஒளித்துக்கொண்டிருக்கும் மக்கள் விரோதிகள் "ஆட்கள்" என்று கொச்சைப்படுத்தியும், பேப்பரும், பேனையும், மையும், நேரமும் வீணாக்கும் அரசியற் குருட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ர்கள் எனவும் இழிவு செய்வது அனுமதிக்கப்படக் கூடாதது.

தூண்டில் தனது பணியை இதன் மூலம் கறைப்படுத்திக் -கொள்ள வேண்டாம். ஒன்றில் இதுவரை வெளிவந்த தேசத்தின் குறிப்புகளுக்கு தூண்டில் தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும். அல்லது தேசத்தின் குறிப்புகள் நிறுத்தப்பட வேண்டும்.

—சற்குணநாயகம்

. . . . .

வெளிநாடுகளிலிருக்கும் எங்களால் தனியே இலங்கையிலிருந்துவரும் கடிதங்களை வைத்தோ, வீரகேசரி, ஐலண்ட்டை வைத்தோ, இயக்க பிரசுரங்களை வைத்தோ போராட்டத்தின் போக்குப் பற்றியும், அதன் பாதிப்புகள் பற்றியும் அறிந்து கொள்ள முடியாது. செய்திகள், தகவல்கள் என்ற ரீதியில் இவற்றை ஓரளவு பயன்படுத்த முடிந்தாலும், தங்கள் நிலைப்பாட்டிற்கமைந்த தகவல்களையே இவை தருகின்றனவென்பது தெரிந்த விடயமே. செய்திகள், தகவல்கள் தேவையானவையெனினும் இவை மட்டுமே போராட்டம் குறித்தான பார்வைக்கும், அதற்கான செயற்பாடுகளுக்கும் போதுமானதாக இருக்க முடியாது.

இலங்கைக்கு வெளியே இருக்கும் காலக்கெடு கூடிக்கொண்டு - போவதும், சரியான தகவல்கள் கிடைக்க வாய்ப்பின்மையும், போராட்டத்தின் களமாக இல்லாத சூழலும் வெளிநாடுகளிலிருக்கும் எங்களை போராட்டத்திலிருந்து அந்நியமாக்கும் ஆபத்து சுற்றியேயுள்ளது.

மக்கள் பற்றிய அக்கறையாயிருந்தவர்களில் பலர் மேற்படி நிலைமைகளில் ஒன்றும் சரிவராது என்று விரக்தியடைந்து கொண்டிருக்கிறார்கள். வேறு பலர் அந்நியப்படுத்தலுக்கு ஆளாகிக் கொண்டிருக்கி-றார்கள்.

இந்த நெருக்கடி நிலைமைகளையும் உத்தேசித்தே "தேசத்தின் குறிப்புகள்". ஆரம்பிக்கப்பட்டது. போராட்டத்தில் பங்குபற்றி முடமாக்கப்பட்டவர்களும், விடுதலைக்-கான சரியான வழியைத் தேடுபவர்களும் தங்கள் கருத்துகளை இலங்கையில் எந்தவிதத்திலும் வெளியிட முடியாமல் அரச-இயக்கப் பயங்கரவாதங்கள் அனைத்துப் பக்கங்களிலிருந்தும் உயிரைப் பலியெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அவர்களின் கருத்துகளை வெளிக் கொணரவும், இதன் மூலம் இலங்கை மண்ணிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் விடுதலை விரும்பிகள் போராட்டத்தின் தவறான போக்குகளை விமர்சித்து சரியானதைத் தேடி வளர்த்தெடுக்கவும் உதவும் ஊடகமாக "தேசத்தின் குறிப்புகள்" பிரசுரிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் எமக்கிருக்க கூடிய வாய்ப்புகளை நாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்கிறோமா என்றால் இல்லை என்பதே பதிலாகும். என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும் என்பதாக இல்லாமல், எங்களால் ஆக குறைந்தது எவ்வளவுக்கு இயலுமோ

அவ்வளவுடன் திருப்திப்பட்டுக்கொள்ளும் நிலையில்தான் எங்களில் பலர். எதுவுமே செய்யாமலிருப்பதை விட இது கொஞ்சம் பரவாயில்லை என்பதைவிட இந்த நிலையினால் பெரியளவில் மாற்றம் எதுவும் வந்துவிட போவதில்லை.

ஒவ்வொரு நிமிடமும் பிரச்சினைகளால் அழுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் இலங்கையிலிருப்பவர்கள்-விடுதலையை நேசிப்பவர்கள் - தங்களால் முடிந்தளவு போராட்டம் பற்றிச் சிந்திக்கிறார்கள். வெளிநா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுகளுக்குப் போனவர்களை "துரோகிகள்" என்று முத்திரை குத்தும் இயக்கங்களை விமர்சிக்கும் அதேநேரம், வெளிநாடுகளில் இருப்பவர்களிடம் திறந்த விவாதத்தைக் கோருபவர்களை "சமூக விரோதிகள்" என்று பார்ப்பது வேதனையானது.

"தேசத்தின் குறிப்புகள்" ஆரம்பத்திலிருந்து தங்களுடைய கருத்துகள் சம்பந்தமாக விமர்சனங்கள், மாற்றுக் கருத்துகள் வைக்கும்படி 'பிரஜைகள்' தொடர்ந்து கோரி வருகிறார்கள். கலம் 39இல் பிரசுரமான ஒரு வாசகர் கடிதத்தைத் தவிர வேறு யாரும் இதற்கு முன்வரவில்லை.

முழு உண்மைக்கும் நாங்கள் சொந்தக்காரர்களாகிவிடமுடியாது. பரந்துபட்ட, திறந்த கருத்துப் பரிமாறல்கள் மூலமே சரியானவைகளை நாம் சென்றடைய முடியும்.

மேற்குறிப்பிட்டவைகளின் அடிப்படையில் "தேசத்தின் குறிப்புகள்" நிறுத்தப்படமாட்டாது.

"தேசத்தின் குறிப்புகள்" இல் வரும் அனைத்து வசனங்களுடனும் நாம் உடன்படுகிறோமா இல்லையா என்பதைவிட, விடுதலை பற்றிய பிரஜைகளின் கருத்துகளுடன் உடன்பாடு உண்டா என்பது பிரதானமானது. இதில் உடன்பாடுகொண்டு இதன் வழிகள் பற்றிய கருத்துகளைத் திறந்த விவாதத்துக்கு விட்டுள்ளோம்.

— கடலோடிகள்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொய் முகங்கள்

உச்சி வெயில் மண்டையை பிளந்துகொண்டிருந்தது. பலா மரம் தன்னாலியன்ற நிழலைக் கொடுக்க, கௌரி மீன்களைத் துப்பரவு செய்து கொண்டிருந்தாள். அவளுக்கருகே நாயும், பூனையும் அடிபட்டுக் கொண்டிருந்தன.

அடுப்பெரிப்பதற்காக விறகு கொத்திக் கொண்டிருந்த நாகம்மா ஏசிக் கொண்டேயிருந்தாள். ஒவ்வொரு கொத்தலுக்கும் ஏசிக்கொண்டிருப்பதை தாங்காமல் "சரி அம்மா. இப்ப சமையலுக்கு கொத்துங்க. நான் பின்னேரம் மிச்சத்தைக் கொத்துறன்" என்றாள் கௌரி.

"நான் நேற்றெல்லோ சொன்னனான் விறகு கொத்தி வையெண்டு"

"நான் என்ன சும்மாவே இருந்தனான். சந்திக் கடைக்குப் போயிட்டு வாறதுக்குள்ள மனுசருக்குக் களைச்சிடும். பிறகு விறகும் கொத்துறதெண்டா ஏலுமே. சும்மா கத்திக்கொண்டிருக்கிறீங்கள்" தாங்கமுடியாமல் கௌரியும் எரிந்து விழுந்தாள். பிறகு இருவரும் அமைதியாக இருந்தார்கள்.

"பிள்ளை இவன் தம்பியிட கடிதம் சிலவேளை இண்டைக்கு வரும். கடிதக்காறனைப் பாத்தனியே?" நாகம்மா குரலை மாற்றிக்கொண்டு கேட்டாள்.

"பாத்துக்கொண்டுதானிருக்கிறன். அவர் ஒவ்வொரு தெருவாய்ப் புதினம் விசாரிச்சுகொண்டு வரவேண்டாமே!"

அவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும்போதே கடிதக்காரன் வந்து பெல் அடித்தான். கௌரி மீன் கையையும் வடிவாகக் கழுவாமல் விழுந்தடித்து ஓடினாள்.

"இஞ்ச பார் குமரிய. மீனையும் வடிவா மூடாமல் ஓடுறா" என்றபடி நாகம்மா மீனுக்குப் பக்கத்தில் காவலாக வந்து நின்றாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அண்ணயிட்ட இருந்துதான் வந்திருக்குது" என்றபடி வந்த கௌரி கடிதத்தை உடைத்துப் படிக்கத் தொடங்கினாள்.

நாகம்மாவுக்கு கௌரி, ஞானம் என்று இரண்டு பிள்ளைகள். அவள் கணவர் ஒரு சிறிய சலூன் போட்டு வருமானம் தேடினார். இரண்டு வருடத்திற்கு முன்பு இராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டார். அன்றிலிருந்து நாகம்மாதான் பிள்ளைகளைக் கஷ்டப்பட்டு வளர்த்து வருகிறாள்.

ஞானத்திற்குத் தகப்பனின் தொழில் செய்யச் சிறிதும் விருப்பமில்லை. தலைமயிர் வெட்டும் பரம்பரை என்று சனம் அவர்களை ஒதுக்கியே வைத்திருந்தது.

எனினும் அன்றாடம் சீவியம் நடப்பது கஷ்டமாக இருந்ததால் வேறு வழியில்லாமல் ஞானம் தகப்பனின் சலூனிலேயே தொழிலைத் தொடர்ந்தான்.

கடையில் முன்பு போல வருமானம் இல்லை. இராணுவமும், இயக்கங்களும் பெடியன்களைப் பிடித்துக்கொண்டு போய் தாங்களே மொட்டையடித்துவிட்டார்கள். சலூனைத் தேடி வருபவர்கள் ஒன்றிரண்டு வயது போனதுகள்தான்.

சலூனைத் திறந்தாலும் "இண்டைக்கு கர்த்தால். யார் உன்னைக் கடையைத் திறக்கச் சொன்னது" என்று பூட்ட வைத்துவிடுவார்கள். கர்த்தால் இல்லாத நாளில் "அந்தச் சந்தியில் ஆமியும், பெடியளும் அடிபடுயினம் இந்தச் சந்தியில் பெடியளும், பெடியளும் அடிபடுயினம்" என்று சனம் அல்லோலகல்லோலப்பட்டோட, ஞானமும் கடையைப் பூட்டிவிட்டு அவர்களோடு சேர்ந்து ஓடவேண்டியிருக்கும்.

பின்னைய நாட்களில் அவன் கொஞ்சம் வித்தியாசமாகக் கதைக்கத் தொடங்குகிறான் என்று பெடியள் அவனைப் பற்றி விசாரிக்கத் தொடங்க, நாகம்மா தன்னுடைய சொந்தங்களின் கையிலும், காலிலும் விழுந்து கடன் வாங்கி அவனை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டாள்.

---

சுகந்தி

---

கடிதத்தை கௌரி படித்து, நாகம்மா கேட்டு முடித்த போது சிவாவும், கரனும் வந்தார்கள். இருவரும் ஞானத்தின் உயிர் நண்பர்கள். ஞானம் வெளிநாட்டுக்குப்போனபின்பும் அந்த வீட்டுக்கு வந்துபோய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த ஊரில் வித்தியாசமானவர்கள்.

"என்ன இண்டைக்குத்தான் ரண்டு பேருக்கும் இங்கால வழி தெரிஞ்சிருக்குப் போல" என்று வரவேற்றாள் கௌரி.

"வாசியசாலைக்குப்போய் புத்தகங்கள் எடுத்துக்கொண்டு போனமெண்டால் வீடுதான். வெளிக்கிடமாட்டோம். நாட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலைமையளும் தெரியும்தானே" என்றான் கரன்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்க நாகம்மா தேநீர் போட்டுக்கொண்டு வந்தாள்.

"சீதாக்கா தன்ட பிள்ளையளுக்கு ரியூசன் சொல்லிக் குடுக்க உம்மை வரச் சொன்னவாம். நீர் மாட்டன் எண்டிட்டீராம். ஏன் கௌரி நீர் போனால்செலவுக்குக் கொஞ்சம் காசு கிடைக்கும்தானே?" கரன் கேட்டான்.

"அவையெல்லாம் சனத்த சனம் எண்டு மதிக்கத் தெரியாத ஆக்கள். நான் போனா என்னை எப்பிடி நடத்துவினம் எண்டு எனக்கெல்லோ தெரியும். அவையள் சாதி தடிப்பு பிடிச்சவை. எங்களை வீட்டுக்குள்ளயே சேக்க மாட்டினம். மாட்டுக் கொட்டில்லதான் படிப்பு சொல்லிக்கொடுக்கச் சொல்லுவினம். பிறகு அவையளுக்கு ஏதும் வேலையள் இருந்தால் அதையும் செய்யச் சொல்லுவினம். கூலியா போத்தல்ல தேத்தண்ணியும் தருவினம். இதுக்குள்ள படிப்பு சொல்லிக் குடுக்க வேணுமே ?" என்று கௌரி பொரிந்தாள்.

"உமக்கு இதுபோல முதலும் அனுபவம் நடந்திருக்குபோல. இப்பிடி இடங்களுக்கு நீர் கடைசிவரைக்கும் போகக் கூடாது. நாங்களும் அவையளுக்கு எந்த விதத்திலும் குறைந்த ஆக்கள் இல்லையெண்டு காட்டினாத் தான் அவையளுக்கு விளங்கும். கூப்பிட்ட குரலுக்கு நீங்களும் காலுக்கை போய்க் கிடக்க தான் அவையள் எழும்பியினம் " என்று உணர்ச்சி வேகத்துடன் கதைத்துக்கொண்டு போன கரனைப் பார்த்து சிவா சிரித்தான்.

கரன் விடாமல் "இந்தக் காலத்திலயும் சாதி பாக்கிற சனங்களை நாங்கதான் ஒதுக்கி வைக்க வேணும். என்ன சிவா நான் சொல்லுறது சரிதானே" என்றான்.

சிவா ஓம் என்பதுபோல தலையை ஆட்டிவிட்டு இருந்தான். தன்னுடைய சனத்தைக் குறைத்து கரன் கதைப்பது அவனுக்கு பிடிக்கவில்லையாக்கும் என்று தன் மனதில் நினைத்துக் கொண்டாள் கௌரி.

தேநீர் குடித்து முடித்ததும், "மேயப் போனவனை இவ்வளவு நேரமா காணயில்லையெண்டு அம்மா தேடப்போறா" என்று வெளிக்கிட்டான் சிவா.

"அம்மா தேடுறதும் சரிதானே. எப்ப ஆமி கொண்டு போகுதோ, எப்ப இயக்கம் அள்ளிக்கொண்டு போகுதோ? இப்ப எல்லா அம்மாமாரும் கவலைப்படுறது இதைப் பற்றித் தானே" என்றாள் நாகம்மா.

அவர்கள் இருவரும் புறப்பட்டுப் போனார்கள்.

*

அந்தி நேரம். சூரியன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதுவாக மறைந்துகொண்டிருந்தது.

நாகம்மா பெட்டி இழைத்துக்கொண்டிருந்தாள். கௌரி படலையில் போய் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

சனங்கள் வியர்வை மணங்களுடன் வீடு போய்க் கொண்டிருந்தார்கள்.

தூரத்தில் கரனும், சிவாவும் சயிக்கிளில் வருவது தெரிந்தது.

"என்ன கௌரி றோட்டிலை நிண்டு பிராக்குப் பாத்துக் கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டான் கரன்.

"உங்களைத்தான்"

மூவரும் சிரித்துக்கொண்டு வீட்டுக்குள் சென்றார்கள்.

"வாருங்கோ தம்பிமாரே. ரவுணுக்கை ஆமிக்காறர் சுடுபடுயினம் எண்டு சனம் அடிபட்டு ஓடிச்சிதுகள். இப்ப பாத்தா சாதாரணமா திரியுதுகள். என்னவாம்?" என்று விசாரித்தாள் நாகம்மா.

"தங்கடை அலுவலைப்பாக்காம சனம் என்னெண்டு வீட்டுக்கையே இருக்கிறது. இதெல்லாம் பழகியிட்டுது" என்றான் கரன்.

"ஓம் தம்பியவை. அதுவும் சரிதான். நீங்க கதைச்சுக்கொண்டிருங்கோ" என்று நாகம்மா குசினிக்குப் போனாள்.

மூவரும் கதைத்துக்கொண்டிருந்தார்கள். நாகம்மா எல்லோருக்கும் தேநீர் கொடுத்துவிட்டு தொடர்ந்து பெட்டி இழைக்கத் தொடங்கினாள்.

சிறிது நேரத்தின் பின் நாகம்மா கேட்டாள்" தம்பி கரன், உமக்கு எத்தினை வயசு இருக்கும்? இவன் ஞானத்தின்ர வயசிருக்குமே?"

"ஞானத்தைவிட ஒருவயசு கூட" என்றான் கரன்.

தாய் ஏன் என்றைக்குமில்லாமல் இப்படி வயது விசாரிக்கிறா என்று கௌரி முழித்தாள்.

"இல்லை தம்பி, நீங்கள் இங்கை அடிக்கடி வந்து போக சனம் எல்லாம் வித்தியாசமாய் கதைக்குது. அவையள் கதைக்கிறதாலை நான் சொல்லேலை. எனக்கும் கௌரியை உங்களுக்கு செய்ய விருப்பம். உம்மடை விருப்பத்தையும் தெரிஞ்சா நல்லம். அதுதான் கேட்டனான்" என்று தன் மனதில் உள்ளதை அப்படியே கூறினாள்.

கரன் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. திகைத்தே போய்விட்டான். பின் சுயநினைவுக்கு வந்தவனாய் "இல்ல நாகம்மாக்கா. எனக்கு அப்படி ஒரு எண்ணமும் இல்லை. அதோட எனக்கு ஒரு மச்சாள் இருக்கிறா. அவவைத்தான் எனக்கு செய்துவைக்கப் போறதாய் அம்மாவும், அப்பாவும் சொல்லியிருக்கினம். எனக்குப் பிறகு தங்கச்சிமார் இருக்கிறது உங்களுக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரியும். அவையின்ரை பொறுப்பையும் மச்சாள் வீட்டுக்காறர் தான் கவனிக்கினம். நீங்க நினைக்கலாம் நான் சீதனம் வேண்டுறதுக்காண்டித்தான் அங்க முடிக்கிறன் எண்டு. ஆனா சத்தியமா நான் சீதனம் ஒண்டும் வேண்டயில்லை. என்னை வெளிநாட்டுக்கு அனுப்புறதுக்கான செலவை மட்டுந்தான் அவை பொறுப்பெடுக்கினம்" என்றான் கரன் தடுமாறியபடி.

"பறவாயில்லைத் தம்பி. என்ர மனதிலை இருந்ததைத்தான் கேட்டனான். தப்பாய் நினைச்சுப் போடாதையும்" என்று நாகம்மா தளதளத்த குரலில் சொன்னாள்.



www.tamilarangam.net

"சீ. நான் அப்பிடி நினைக்கமாட்டன். சரி நாங்க போகப் போறம்" என்று கரனும், சிவாவும் வெளிக்கிட்டார்கள்.

அவர்கள் போனது தான் தாமதம், கௌரி தாயை ஏசத் தொடங்கினாள். "ஏன் அம்மா. இப்ப எனக்கு கல்யாணம் செய்துவை எண்டு கேட்டனானே ? அவையள் எல்லாம் மேடைப்பேச்சுக்காறர். சாதி, மதம் இல்லையெண்டு கத்துவாங்க. ஆனா அதுகள் சொந்த வாழ்க்கைக்கு இல்லை. நீங்க இப்பிடிக் கேட்டிட்டீங்களெல்லே. இனி இந்தப்பக்கமே வரமாட்டாங்கள்"

"சரி, சரி. இப்ப என்ன கேக்கக் கூடாததையே கேட்டிட்டன்? சும்மா ஏன் கத்துறாய். எனக்குத்தானே என்ர கஷ்டம் தெரியும்" என்று நாகம்மா கண்ணீர் விட்டாள்.

கௌரி அதற்கு மேல் தாயிடம் எதுவும் கதைக்கவில்லை.

சிவாவும், கரனும் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தார்கள்.

"ஏன் கரன், உண்மையிலை உன்ரை மச்சாளையே செய்யப் போறாய்? இதைப் பற்றி என்னோட நீ ஒருநாளும் கதைக்கேலயே?" என்று சிவா கேட்டான்.

"ஓம்" என்று சுருக்கமான முறையில் பதிலளித்தான் கரன்.

"அப்ப உன்னை வித்தியாசமான ஆள் எண்டு காட்டினது எல்லாம் பொய்தானே?"

"உனக்கே தெரியும். நாங்கள் ஞானம் வீட்டை போய் வாறதை எல்லாரும் நக்கலடிச்சினம். ஏன் இவன் தங்கராசு கூட, இவ்வளவு கதைக்கிறியள். போறியள், வாறியள். ஞானத்தின்ரை தங்கச்சியை உங்களிலை ஆராவது கட்டுவியளே எண்டு நக்கலாய் கேட்டவன்தானே." என்றான் கரன்.

"நாங்க வித்தியசமாய் எங்களைக் காட்டினா சனம் இப்பிடித்தான் கதைக்கும். சனம் சொல்லுது எண்டதுக்காக சாதி குறைந்ததையோ அல்லது கஸ்டப்பட்டதையோ விருப்பமில்லாமல் கட்டிப்போட்டு பின் அவையளை கஸ்டப்படுத்தவோ? ஏமாத்தவோ கூடாது" என்றான் சிவா.

"அதோடை நான் ஒரு தன் சாதி குறைவா கட்டினால் உடனேயே சாதி இல்லாமல் போகப் போகுதே. எல்லாரும் அப்படித்தான் நினைக்கினம். ஆனால் அதுக்கு அடிப்படைக் காரணம் வேறு" என்றான் கரன்.

"அப்ப உனக்கு உன்னிலையே நம்பிக்கையில்லையெண்டு சொல்லு" என்றான் சிவா.

"ஏன் இவ்வளவு ஆவேசத்தோடை கதைக்கிறியே. நீ அவளைச் செய்யலாம்தானே?" என்று திருப்பிக் கேட்டான் கரன்.

(தொடர்ச்சி 49 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 21 ம் நூற்றாண்டுக்கு போவதற்கு 10 ஆண்டுகள் முன்பாக நம்முடைய தேசம் பற்றி 4 கவிதைகள்

அனிச்சா
(ஈழம்)

---

4வது:

உனக்குத் தெரியாதா?
சபிக்கப்பட்ட பூமி இது.
பூபாளம் ஒலித்த அதிகாலைவேளையும்,
பூக்கள் மலர்ந்து சொரியும் வசந்தகாலங்களும்
எமக்கு மறந்துபோயின.
அல்லது எம்மை அறியாமல்
வரும், போகும்
எல்லாமே இங்கு
பொய்யாய், பழங்கதையாய்...

தொலைவில் இருந்தபடி
எனது நிலம், எனது மக்கள்
என நீ உருகுவாய்.
நான் என்ன சொல்ல?
எமது வார்த்தைகளுக்கும்,
பார்வைக்கும், எழுத்துக்கும்,
பாதைக்கும்கூட
காலம் ஒன்று இருந்தது.

இப்போது எதைச்சொல்ல?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தாய் நிலம் பிளந்து
புதல்வரைக் கேட்கும்'
யுத்த பூமி இது....?

புதல்வர்கள் எங்கே?

சந்திகள் தோறும் கருகிய உடல்கள்,
தெருவோரம் எங்கும் நிணத்தின் சேறு.
மனிதநேயம் மருந்திற்கும் இல்லை.
மூச்சுக்கூட விடமுடியாதபடி
எமது பூமியில்
எப்படி வாழ?

கைகட்டி, வாய் பொத்தி,
பேனைகளைத் தூக்கி, குப்பையில் வீசி,
மூலையில் சுருண்டு படுக்கும்
நாய்க்குட்டி போல
இருக்க முடியுமா?

எமது மண்ணைப் பிரிந்து
மக்களைப் பிரிந்து
வாழ்வது ஒன்றும் சுகமானதல்ல.
நான் அறிவேன்.

தாயைத் தேடும் பறவைக் குஞ்சாய்
நம்பிக்கைகளின் மூச்சுகளோடு

ஓடிவரும் உனக்கும்,
உனது நம்பிக்கைகட்கும்
வாழ்த்துகள்.


வருக நீ.
பணி தொடர்வோம்.

பின்னட்டை அறிவித்தல்:

கலம் 24இல் பிரசுரமான இல
ங்கை வாசகர் ஒருவரின் கடித
த்திலிருந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




01.03.91 வீரகேசரி

மன்னார் மடுப் பகுதியிலுள்ள புலிகளின் முகாம் மீது முப்படைகளும் தீவிர தாக்குதலை நடத்தவுள்ளன .. இதன் காரணமாக அங்குள்ள 9ஆயிரம் அகதிகளையும், சர்வதேச நிறுவனங்களைச் சேர்ந்தோரையும் உடனடியாக வெளியேறுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

01.03.91 தாயகம்

புலிகளை ஒழிப்பதற்காக அரசுக்கு உதவி செய்ய ஈரோஸ் முன் வந்துள்ளது. புலிகளின் தளங்கள், பாதுகாப்பிடங்கள் பற்றிய விபரங்களை அரசுக்கு ஈரோஸினர் தெரிவிப்பதாகவும், திருகோணமலை, அம்பாறைப் பகுதிகளில் இத் தகவல்கள் மூலமே அரசபடைகள் வெற்றியீட்டியிருக்கின்றன.

புலிகள் இயக்கத்தில் தற்போது மாத்தயாவின் கையைவிட பிரபாகரனின் கை ஓங்கியுள்ளதாகவும், கடந்த ஓராண்டுக்கு மேலாக மௌனம் சாதித்து வந்த பிரபாகரனின் பெயர் தற்போது யாழ் பத்திரிகைகளில் அடிபடத் தொடங்கியுள்ளதாகவும், மாத்தயாவின் படங்களும் பேச்சுகளும் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. கிளிநொச்சிப் பகுதியில் சந்திரன் என்பவர் கொல்லப்பட்டது மாத்தயா, பிரபாகரன் கோஷ்டியினருக்கு இடையேயான மோதல் என்று கருதப்படுகிறது.

02.03.91 வீரகேசரி

அரசுக்கும், புலிகளுக்குமிடையே கடந்த ஜூனில் சண்டை மூண்டபின்பான கடந்த 8 மாதங்களில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 7,500 பேர்கள் பற்றிய தகவல்கள் எதுவுமில்லை. மட்டக்களப்பில் 1,591பேரும், அம்பாறையில் 2,220 பேரும் திருமலையில் 1,500 பேரும், வடமாகாணத்தில் 1,500 பேரும் அரசபடையினரால் கைது செய்யப்பட்டபின் அவர்களைப் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லை.

தாண்டிக்குளம் பகுதியில் புலிகளுக்கும், புளொட்டுக்குமிடையிலான மோதலில் ஒரு பெண் அகப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

பனங்காட்டுப் பகுதியில் 469 குடும்பங்கள் 10 கொட்டில்களில் நரகவேதனையுடன் வசித்து வருகிறார்கள். இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 1,944 பேருக்கும் அடிப்படை சுகாதார வசதிகள் எதுவுமேயில்லை. ஒரு மலசலகூடம் கூடக் கிடையாது. இப் பகுதி பூராவும் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் பல தொற்று நோய்கள் பரவிவருகின்றன. இவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் ஒருசில நாட்களுக்குத்தான் போதுமானதாக இருப்பதால் ஏனைய தினங்களில் இவர்கள் பட்டினி கிடக்கிறார்கள். இங்குள்ள சகலரும் விவசாயத்திலும், கூலி தொழிலிலும் ஈடுபட்டு வந்தவர்கள் இப்போது தொழிலில்லாது கொட்டில்களுக்குள்ளே கைதிகளாக இருக்கவேண்டியிருக்கிறதேயென்று கண்ணீரும் கம்பலையுமாகத் தெரிவிக்கிறார்கள். குடிக்கும் நீர் கூட இங்கு சுத்தமாக இல்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ள தேயிலை விலையேற்றத்திற்கேற்ற சம்பள அதிகரிப்பு 1990 ஆண்டின் மே, ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்கு மட்டுமே வழங்கப்படவிருக்கிறது. ஏனைய மாதங்களில் தேயிலை விலையேற்றம் இல்லாமையினால் எத்தொகையும்– வழங்கப்படமாட்டாதென அரசபெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அதன் கீழுள்ள சகல தோட்டங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. இதன்மூலம் 1990 டிசம்பர்வரை ஒரு தொழிலாளி 26 நாட்களும் வேலைசெய்திருந்தால் கூட 29.90ஐ



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மட்டுமே மேலதிகமாகப் பெறமுடியும்.

அதிகாரப் பகிர்வில் முஸ்லீம்களுக்கு ஒரு தனி அமைப்பு, சிறுபான்மையினத்தவருக்கு 50:50 என்ற ரீதியில் சமப்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவம் ஆகியவற்றிற்கு ஆதரவாக நின்ற தமிழ் காங்கிரஸ் அதன் நிலையை இன்று மாற்றிக்கொண்டுள்ளது. இறுதியாக கடந்த பெப்ரவரி 16இல் சர்வகட்சி மகாநாட்டில் வாசிக்கப்பட்ட தமிழர்-முஸ்லீம் கட்சிகளின் கூட்டறிக்கையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கையொப்பமிட மறுத்துவிட்டது. பெரும்பான்மையினத்தவரின் ஆட்சிக் கொடுமைகளை எதிர்த்து வன்மை-யாகக் குமுறிய இந்தத் தமிழர்கட்சிகள் வட-கிழக்கில் தம்மோடுவாழும் முஸ்லீம் சிறுபான்மையினத்தவரின் ஆட்சிக் கொடுமைகளை

ன் நியாயமான உரிமைகளை அங்கீகரிக்காமல் உதாசீனம் செய்வது பெரும் கவலைக்குரியது. ஆகவே – நாம் தமிழர் கட்சிகளுடனான பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக்கொள்கிறோம் – மு.ஐ.வி.மு.

03.03.91 வீரகேசரி

பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன கொழும்பில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்டார். இவருடன் மெய்ப்பாது காவலர்களான 4 கொமாண்டோக்கள் உட்பட 20பேர் கொல்லப் பட்டனர்.

04.03.91 வீரகேசரி

கொல்லப்பட்ட பாதுகாப்பமைச்சரின் பூதவுடலுக்கு தமிழ் காங்கிரஸ் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.பி.டி.பி. தலைவர்களும், செயலாளர் நாயகங்களும் மலர் வளையங்களை வைத்து தமது இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

பல்வேறு உயர் பதவிகளை வகித்த போதும் கறைபடியாது செயற்பட்டுவந்தவர் அமைச்சர் ரஞ்சன். பெருந்தோட்ட தொழிலமைச்சின் ஊடாக மலையக மக்கள் மத்தியில் சேவையாற்றி அவர்களின் அபிமானத்தைப் பெற்றவர் –ஈ.என்.டி.எல்.எவ்.

தனி மனித உயிர்களைப் பலியெடுத்து, நாட்டைக் குட்டிச் சுவராக்கும் கூட்டத்தையடக்குவதற்கு இன, மத பேதமின்றி உழைத்து வந்த வெள்ளைமனம் கொண்ட புனித ஆத்மா மறைந்துவிட்டது. அப் புனித ஜீவன் சாந்தியடைய நாமெல்லோரும் – ஒன்றிணைந்து பிரார்த்திப்போம் – கல்வி இராஜாங்க அமைச்சர் இராஜ மனோகரி

ரஞ்சன் பாதுகாப்பமைச்சராயிருந்தகாலத்தில் எவ்வித வன்முறைகளும் தமிழர்களுக்கு எதிராகத் தலைதூக்கவில்லை – தமிழ்காங்கிரஸ்

இலங்கை நாட்டின் ஓர் பெரும்புதல்வன், பூரணத்துவம் நிறைந்த ஓர் கனவான், நேர்மை மிக்க அரசியல்வாதி, தமிழ் பேசும் மக்களின் ஓர் உண்மையான நண்பன் படுகொலை செய்யப்பட்ட தலைவர் ரஞ்சன். தேச சேவையில் தன்னையே அர்ப்பணித்த ஓர் நற்புதல்வனை நம் நாடு இழந்து நிற்கிறது –ரெலோ

இந்நாட்டு தமிழ்-சிங்கள மக்களிடையே இன ஐக்கியத்தையும், அதே வேளை பெருந்தோட்டத்துறையில் இந்திய வம்சாவளி மக்களது வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அக்கறையாக இருந்த ஒரு உண்மையான நண்பனை இழந்துவிட்டோம்– இ.தொ.கா

இந்த நாட்டில் பாசிசத்துக்கும், இனவாதத்துக்கும் சுயலாப அரசியல் சக்திகளுக்கும் எதிராக உறுதியாக போராடிய நெஞ்சுரம் கொண்ட தலைவரை நாடு இழந்துவிட்டது – ஈ.பி.டி.பி.

ஒரு வெள்ளை ரோஜா கருகியது– வீரகேசரி

05.03.91 வீரகேசரி

ந.ச.ச.கட்சியின் தலைவர் வாசுதேவ ரஞ்சனின் உடல் வைக்கப்பட்ட பேழைக்கு முன்னால் சில நிமிடங்கள் வேதனையுடன் நின்று அஞ்சலி செலுத்தியதைக் காணமுடிந்தது.

06.03.91 வீரகேசரி

ரஞ்சனின் நேர்மையும், வெளிப்படையான தன்மையும், கடமைகளில் உள்ள விசுவாசமும், சக்தியும் அவர்மேல் எம்மை மரியாதைகொள்ளவைத்தன. அவரது மிலேச்சதனமான படுகொலையானது வரலாற்றில் துன்பகரமான ஓர் சம்வமாகும்– த.வி.

07.03.91 வீரகேசரி

பாதுகாப்பு இராஜாங்க அமைச்ச



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராக பிரமரும், நிதி அமைச்சருமா
ன விஜேதுங்க நியமிக்கப்பட்டுள்ளா
ர். இவரைச் சந்தித்த ஈ. பி. டி. பி
தலைவர்கள் தமது வாழ்த்துகளைத்
தெரிவித்துக் கொண்டனர்.

தொண்டமானாறு, நெல்லியடி, கொ
க்குவில், கோண்டாவில் முதலிய இட
ங்களில் மேற்கொள்ளப்பட்ட விமா
னக் குண்டுவீச்சுத் தாக்குதல்களால்
பல பொதுமக்கள் கொல்லப்பட்டு
ள்ளனர். தொண்டமானாறு பாடசா
லைக்கு அருகிலுள்ள வீட்டிலிருந்த 6
பேர் அவ்விடத்திலேயே கொல்லப்
பட்டுள்ளனர்.

ரஞ்சனினதும், அதிரடிப்படை அதிகாரி
கள் மற்றும், அப்பாவிப் பொதுமக்
களினது படுகொலை குறித்து எமது
கவலையையும், அதிர்ச்சியையும் தெ
ரிவித்துக் கொள்கிறோம் - அன்னை
யர் முன்னணி

08.03.91 வீரகேசரி

மனித உறவுகளை மதித்து நடந்த
ஒரு நேர்மை மிக்க அரசியல்வாதி
யை நாடு இழந்து துன்பத்தில் ஆழ்
ந்துள்ளது - ஈரோஸ் ரஞ்சனின்
மறைவு குறித்து.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதி
தாக 5 இராணுவ முகாம்கள் ஏ
ற்படுத்தப்படவுள்ளன.

09.03.91 வீரகேசரி

வெல்லாவெளிப் பகுதியில் இடம்பெ
ற்ற ஹெலி, ஷெல் தாக்குதல்களி
னால் பல பொதுமக்கள் கொல்ல
பட்டுள்ளனர்.

10.03.91 வீரகேசரி

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில்
எல். ரி. ரி. ஈ. க்கும், புளொட்டுக்கு
மிடையிலான மோதலில் பலர்கொ
ல்லப்பட்டுள்ளனர்.

11.03.91 வீரகேசரி

எமது நிறைவேற்றுச் செயலாளர்
வே. பாலகுமாரன் சுதந்திரமாகச்
செயற்பட முடியாதநிலையில் யாழ்
ப்பாணத்தில் உள்ளார். இதன் கார
ணமாக தனது பொறுப்புகளிலிருந்து
விலகிக் கொள்வதாக மத்திய குழு
வுக்கு கடிதம் எழுதியுள்ளார்- ஈ
ரோஸ்

12.03.91 வீரகேசரி

சுன்னாகம், கொக்குவில், கோண்டா
வில், யாழ்நகர் பகுதிகளில் இடம்
பெற்ற பாரிய விமானத் தாக்குத
ல்களின்போது ஒரே நாளில் 28
பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளன
ர்.

13.03.91 வீரகேசரி

கொழும்பில் அகதி முகாம்களிலிருக்
கும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த
தமிழ் அகதிகள் வெளியாரினால் -
தாக்கப்பட்டு வருவதால், பாதுகா
ப்பற்ற நிலையில் அச்சத்துடன் வா
ழ்ந்து வருகின்றனர்.

14.03.91 வீரகேசரி

உடனடியாக யுத்த நிறுத்தமொன்-
றைக் கொண்டுவந்து புலிகள் உட்
பட சகல தமிழ்க் கட்சிகளுடனும்
பேச்சுவார்த்தை நடத்தி அரசியல்
தீர்வொன்றைக் காண அரசு முன்
வரவேண்டும். ஒன்றுபட்ட இலங்கைக்
குள் தமிழ் பேசும் மக்களின் சுய
நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே
உறுதியானதும், நீடித்ததுமான தீர்வு
க்கு வழி வகுக்கும் - ஈ. பி. ஆர் .
எல். எவ்.

மண்டூர், தம்பலவத்தை, பாலமுனை,
14ஆம் கொலனி ஆகிய கிராமங்க
ளைச் சேர்ந்த மக்களை இராணு
வத்தினர் குடும்பம் குடும்பமாகப்
புகைப்படம் எடுத்து, அக் குடும்பங்
களின் பெயர், விபரங்களையும் சே
கரித்து வருகின்றனர்.

சத்திர சிகிச்சைக்குப் பயன்படும்
ஆயுதங்கள், பஞ்சு, துணியுட்பட மரு
ந்து வகைகள், நவீன மின்சார உப
கரணங்கள், பெற்றோல், டீசல், ரிசு
பொலித்தீன் பாக் வகைகள், எலக்
ரோனிக் விளையாட்டுப் பொருட்
கள், மின்சார வயர்கள், சப்பாத்து
கள், கறுப்பு சேட்டுகள், காற்சட்-
டைகள், கன்வஸ் சப்பாத்துகள், முட்
கம்பி, ஆணிகள், மெழுகு திரிகள், இரு
ம்பும், இரும்புக் கம்பிகளும், மரப்
பலகைகள், அலுமினியம், புதிய மோ
ட்டார் சைக்கிள்கள், மின்சார அடு
ப்புகள், பள்ளிமாணவரின் பாக்குகள்
சீமெந்து, வெள்ளைக் கடுதாசி, சு
காதாரத் தேவைக்குரிய துவாய்க
ள், ரோனியோ போட்டோக்கொ
ப்பி மெசின்கள், கற்பூரத்தைலம்..

என்பன வடபகுதிக்கு எடுத்துச்செல்
லத் தடைவிதிக்கப்பட்ட பொருட்க
ளில் சிலவாகும்.

15.03.91 தாயகம்

துணுக்காயில் ஆயிரக்கணக்கானவர்

www.tamilarangam.net

களைக் கைது செய்து காவலில்வைத்துள்ள புலிகள் தற்போது ஆனைக்கோட்டையிலும் புதிய சிறைச்சாலையொன்று அமைத்து வருகின்றனர்

மனிலாவிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இலங்கை 200 கோடி ரூபாவைக் கடனாகப் பெறவுள்ளது இக் கடன் 40 வருடங்களில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும்; இதற்கான வட்டி 1 வீதம்; இந்தக் கடனுக்கு நிபந்தனையாக தேயிலை, றப்பர் பொருட்களின் ஏற்றுமதிவரி குறைக்கப்படவுள்ளது.

15.03.91 வீரகேசரி

வவுனியா தேவகுளம் பகுதியில் இடம்பெற்ற விமானக்குண்டுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 பெண்கள் உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள மடுமாதா ஆலயப் பகுதியிலிருந்து அகதிகளை வெளியேற்றுவதைக் கைவிடவும், அதற்குப் பதிலாக புலிகளுக்கு எதிரான இராணுவத் தாக்குதலை மேற்கொள்ளவும் அரசு தீர்மானித்துள்ளது.

சர்வதேச விவகாரங்களுக்கான ஐனாதிபதியின் ஆலோசகர் வீரக்கோன் அண்மையில் ஜெனிவா சென்றிருந்தபொழுது புலிகளின் பேச்சாளரான திலகருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மண்டூர் முருகன் ஆலயச் சுற்றாடலில் தங்கியுள்ள சுமார் 100 அகதி குடும்பங்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு ஆலய நிர்வாகம் கூறியுள்ளது. இம்மாத இறுதியில் இவ்வாலயத்தில் கும்பாபிசேகம் நடைபெறவுள்ளதாலேயே இவர்கள் வெளிறேப்படுகின்றனர். இதனால் நிர்க்கதிக்குள்ளான இவ்வகதிக்குடும்பங்கள் செய்வதறியாதுள்ளன.

16.03.91 வீரகேசரி

மகசீன் சிறைச்சாலையில் 292தமிழர்களும், 17 முஸ்லீம்களும் தடுப்புக்காவலில் 10 மாதங்களுக்கும் கூடுதலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையரசுக்கும், புலிகளுக்கும் நல்லுறவு இருந்த காலத்தில் இவர்களில் பலர் புலிகளுக்கு உடலுழைப்பை வழங்கியிருந்தனர். ஆனால் அரசு–புலிகளுக்கிடையிலான உறவு முறிந்தபின் பக்கச் சார்பற்றிருந்த இவர்கள் பற்றிய தகவல்கள் எதிர் இயக்கங்களால் பாதுகாப்புப்படையினருக்கு வழங்கப்பட்டமையினாலேயே இவ் அப்பாவிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை உப்புவெளியில் மீன்பிடிக்கச் சென்ற முஸ்லீம் மீன்வர்கள் கடலில் வைத்துப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மலையகப் பெண்கள்தான் உலகிலேயே தலைசிறந்த உழைப்பாளிகள். கூடுதலான நேரம் வேலை வாங்கப்படுபவர்களும் அவர்கள்தான். நூறாண்டு காலமாக இவர்கள் சுரண்டப்பட்டு வருகிறார்கள் –ஐ.தொ.மு.

19.03.91 வீரகேசரி

எமது தலைவர் பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட மாட்டார். மக்கள் அதை அனுமதிக்க மாட்டார்கள். பிரபாகரனின் பாதுகாப்பே எமது பிரதான அக்கறை" – திலகர்

அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையினால் கைது செய்யப்பட்டவர்கள் கோணகேண படை முகாமுக்கும், கல்முனை முகாமுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

21.03.91 வீரகேசரி

ரஞ்சன் விஜேரத்ன இராணுவத்துடன் நெருக்கமாகச் செயற்பட்டு அரசியல் ரீதியில் வெகுவாக உயர்ச்சியடைந்துகொண்டு வந்ததால் ஆளும் கட்சிக்குள் இருப்பவர்கள் சிலராலேயே கொலை செய்யப்பட்டிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தைக் கிளப்பும் வகையில் த எக்னோமிஸ்ட் சஞ்சிகையில் கட்டுரை வெளியாகியுள்ளது.

22.03.91 தாயகம்

பகிரங்கக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் தடைசெய்யும் அரசசட்டத்தை வாபஸ் பெறக் கோரி வர்த்தக தொழிற் சங்கம் கொழும்பில் நடத்திய வேலை நிறுத்தத்தில் சுமார் 20,000 தொழிலாளர்கள் பங்குபற்றினர்.

ரஞ்சனின் கொலை தொடர்பாகச் சந்தேகிக்கப்படும் ஜோகிம் என்ற வெளிநாட்டவருடன் இருக்கக் கூடிய தொடர்புகள் குறித்து ஆராயவேண்டும் என்றும், ஆணைக்குழுவை நியமித்து விசாரிக்குமாறும் எதிர்க்கட்சிகள் கோரியிருந்தனர். அரச தரப்–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல் பிரதமர் இக் கோரிக்கையை நிராகரித்ததுடன், இப்படி நியமித்-தால் எல்லாக் குண்டு வெடிப்புகளுக்கும் ஆணைக்குழு நியமிக்க வேண்டி வரும் என்று கூறியுள்ளார்.

22.03.91 வீரகேசரி

வடக்கு, கிழக்கிலுள்ள மக்களை அவர்களது வீடுகளில் அமைதியாகவாழ அனுமதிக்காவிட்டால் இந்திய அமைதிகாக்கும்படை இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்தையும் மீறி இங்கு வரவேண்டிய சூழ்நிலை உருவாகலாம். வடக்குக் கிழக்குப் பகுதியும் இலங்கையரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கவேண்டும் என்றுதான் நாமும் விரும்புகிறோம் — த.வி.கூ.

சொந்தப் பாதுகாப்பைப் பற்றி அதீதமாகக் கவனம் எடுத்து மறைந்து வாழ்வாரேயானால் பிரபாகரனினால் போரிலே வெல்ல முடியாது —காமினி பொன்சேகா

மட்டக்களப்பில் அன்னமலை என்ற கிராமத்தில் தேடுதல் நடத்திய ஆயுதப்படையினரும், ரெலோவும் 24 பேரை விசாரணைக்கென கொண்டுசென்றுள்ளனர். இன்றுவரை இவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

23.03.91 வீரகேசரி

அக்கரைப்பற்று நகரிலுள்ள பொது சந்தை ஒன்றுக்குள் குண்டு வெடித்ததில் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 40க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

வவுனியா பகுதியிலுள்ள இராணுவமுகாம்களில் மேலதிக படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

28.03.91 வீரகேசரி

தம்பலகாமம் பகுதியில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு அரசினால் வழங்கப்பட்ட நிவாரணங்கள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளன. அன்றாட பாவனைப் பொருட்களை விநியோகித்து வந்த பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களும் இராணுவத்தினால் சீல் வைக்கப்பட்டுள்ளன.

தி.மு.க.வுக்கும், புலிகளுக்குமிடையிலான தொடர்பை விளக்கி தான் ஒரு புத்தகம் எழுதியிருப்பதாக சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

### வானாவும், போனாவும்.



"புலிகளுக்கு ஆதரவு காட்டினதாலை தான் கருணாநிதியைப் பதவியிலயிருந்து மத்திய அரசு கவிட்டதாம்"

"மத்தியப் பிரதேசத்திலை இருக்கிற முன்னாள் மாகாணசபை முதல்வர் வரதருக்கு மாதம் 60 இலட்சம் ரூபா செலவழிக்கிறதைக் காரணங்காட்டி மத்திய அரசாங்கத்தைக் கவிக்க கருணாநிதிக்குப் பவர் இல்லைத்தானே"

இன்னன்னா.

29.03.91 வீரகேசரி

இஸ்ரேல் நாட்டின் பிரஜையான — 'மொசாட் அதிகாரியை ஆக்குதலும், அழித்தலும்' என்ற நூலின் எழுத்தாளர் அந்த நாட்டுப் பிரதமரின் கீழ் இயங்கும் மொசாட் அமைப்பைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் இது நாட்டுக்குச் செய்யும் துரோகமாகும். எனவே அவர் தேசத்துரோகி — மொசாட் விசாரணை ஆணைக்குழுவில ரவி ஜெயவர்த்தன.

31.03.91 வீரகேசரி

ஆரைப்பற்றில் 52 வயது முதியவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு இனத்தின் வரலாறு

இன்னும் சில வருடங்களில்
இலங்கையில்
மனிதரைப் பார்க்க முடியாது.
மண்டையோடுகளைத்தான் பார்க்கலாம்.

மறைந்து வாழ்கிற
இனங்களை
வனங்களில் பார்க்கலாம்.

அழிந்து போகிற இனத்தில்
இலங்கையில்
தமிழரும் அடங்கும்.

உணர்வுகளால்
அடக்கப்பட்ட இவர்கள்
உணவு இல்லாமலேயே
இறந்து போனார்கள் என்பதுதானே
நாளைய சரித்திரம்?

பாரிய செல்லடி
குண்டு வீச்சுக்களுக்கு
முகங்கொடுக்க
இவர்களால் எவ்வளவுகாலம் முடியும்?

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
வாழ்ந்த இனம்
சூழ்நிலைகளுக்கேற்ப
குண்டு வீச்சுகளுக்குள்
கூர்ப்படைய முடியாமல்
இருபதாம் நூற்றாண்டு இறுதியில்
முற்றாக அழிந்து போயின என்று
கை, கால் இல்லாத
எலும்புக் கூட்டுக்குக் கீழ்
கட்டியம் போட்டிருப்பர்
நாளைய விஞ்ஞானி.

-தேவன்-

www.tamilarangam.net

இன்று எமது தேசத்தின் போராட்டமானது கடந்த 7 வருட வர்க்கங்களின் மோதல்களால் ஒருவிதமான அழிவினை நோக்கிய பாதைக்கு இட்டுச் செல்லப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந் நிகழ்வினை நாம் தொடர்ந்தும் அனுமதிப்போமானால் இலங்கையின் தேசப்படத்தில் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் மக்களின் சுதந்திர வாசனையை உணரமுடியாமல், ஏகாதிபத்தியவாதிகளினதும், சிங்களப் பேரினவாதிகளினதும் அடிமை விலங்குகளின் கோரக் காட்சியினையே காணமுடியும்.

சிந்தனைவாதிகள் மனிதரை விஞ்ஞானபூர்வமாக நோக்கும்பொழுது அவரது இருப்பிடத்திற்கான சுதந்திரத்தை நிலைநாட்டவேண்டியவர்கள் ஆகிறார்கள். ஆனால் இன்று இந்த சிந்தனைவாதிகள் பல்வேறு கோணங்களில் நிற்கிறார்கள். இந்த நிலையில் விவாதங்களுக்கூடாகவே எமது போராட்டத்தின் போக்குப் பற்றிய முடிவுக்குவரலாம். இதை எமது தேசத்தில் பலவித மேலாதிக்கங்களுக்குமத்தியிலிருந்து நோக்க வேண்டியுள்ளது. நீங்களும் தொடர்ந்து எழுதுவதன் மூலம் நாம் எம்மிடையே ஒரு கருத்து ரீதியிலான உடன்பாட்டை எய்தலாம்.



தமிழ் பேசும் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை ஆரம்பித்தது அரசியல், பொருளாதார ரீதியிலான சிறிலங்கா பேரினவாத அடக்குமுறையே என ஒட்டுமொத்தமாகச் சொன்னாலும் மொழி, பல்கலைக்கழகத் தரப்படுத்தல், தொழில் வாய்ப்புகளே போராட்டத்தைக் கூர்மையடையச் செய்தன. தமிழ் தரகு முதலாளித்துவக் கட்சிகள் தமது சுகபோகங்களைப் பேணிக் கொண்டே இம்மேலாதிக்கத்துக்கு எதிராகவும் "குரல்" கொடுத்தனர். தமது நலன்களுக்காக இளைஞர் அணியினை ஏற்படுத்தினர். இவர்களுக்கிடையிலான முரண்பாடுகள் எமது போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக்கியது. இங்கே தமிழ்த் தரகு முதலாளிகளும், ஆயுதம் தரித்த இயக்கங்களும் இரு வேறுபட்ட முகாம்களாகப் பிரிவடைகின்றன.

தரகு முதலாளித்துவ கட்சியென தமிழ்க் கட்சிகளை(1977) எவ்வாறு ஏற்றுக் கொள்வது என்பது பிரச்சினையாகவிரு

# என்ன செய்யப் போகிறோம்?

www.tamilarangam.net

க்கலாம்.

ஏகாதிபத்தியங்களுக்கு இன்றைய நவகாலனித்துவ பொருளாதார அமைப்பில் இலங்கையின் பொருளியல் வளங்களை சிறீலங்கா பேரினவாதக் கட்சிகள் தாரைவார்த்துக் கொடுத்த அதேவேலையையே இந்தத் தமிழ் கட்சிகளும் செய்தன. இவர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள பேரினவாதிகளுடன் போட்டியிட்டது பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றிக் கொள்வதற்காக-வே. இதற்காகவே இவர்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமை போராட்டத்திற்கு பச்சை விளக்குக் காட்டினார்கள்.

இவர்களின் மேலாதிக்கத் தன்மை தமிழ் மக்களிடையே ஆயுத இயக்கங்களின் போராட்ட உருவாக்கத்திற்கும் இவர்களின் வீழ்ச்சிக்கும் வழி வகுத்தது.

இங்கு உண்மையாக தமிழ் பேசும் மக்களின் ஆதரவுடன் தமிழ் தரகு முதலாளித்துவ கட்சிகள் தூக்கியெறியப் படும் ஒரு வரலாற்றுப்போக்கு உருவாக்கப்படுகின்றது. இதன்பின் கட்சி ஆதரவான பரந்துபட்ட மக்களுக்கும், கட்சியில் உதிரிகளாக்கப் பட்டுப்போன தலைமைக்குமிடையே மாபெரும் இடைவெளி உருவாகின்றது. ஆனால் தலைமையோ அதன் போக்கில் இன்றுவரை இம்மியளவும் மாறவில்லை இதே தன்மையினை ஆயுதப்போராட்ட இயக்கங்களுக்கிடையேயும் காணலாம்.

ஆயுதப்போராட்டம் அடைந்த முதிர்ச்சியற்ற வளர்ச்சியும், தலைமைகளின் விதேசிய போக்கும் இத் தலைமைகளினால் மக்கள் ஆதரவைத் தொடர்ந்தும் நிலைநாட்ட முடியாமற் செய்தன.

எமது ஆயுத இயக்கங்களின் வளர்ச்சியானது பரந்துபட்ட மக்களின் விடுதலைக்கான சரியான இலக்கை வைத்து உருவாக்கப்படவில்லை என்ற நிகழ்வு எவ்வாறு உருவானது? இப்போக்கு நாம் வாழ்ந்த சமூகத்தின் அடிப்படைப் பண்புகளிலிருந்து உருவானதா? அல்லது தலைமைகள் அவர்களுக்கே தெரியாமல் ஏகாதிபத்திய ஏஜென்டுகளாக உருவாக்கப்பட்டார்களா? என்ற கேள்விகள் எல்லாம் எமது தேசவிடுதலையுடன் சம்பந்தப்பட்டு எழுப்பப்படுகின்றன.

இந்தத் தலைமைகள் தமது இயக்கத்தின் உறுப்பினர்களையும், மக்களையும் வழி நடத்திய தன்மை எந்தவகைகளில் நோக்கப்படவேண்டியவை? இத் தலைமைகட்கும், இயக்க உறுப்பினர்கட்கும், மக்களுக்கும் புறநிலையாக உருவான உறவு என்ன? இவைகளில் எல்லாம் போராட்டத்தின் புறச்சூழலுக்கு இருந்த தொடர்பென்ன? என்பவைகளுடன் இந்த இயக்கங்களுக்கும், பாராளுமன்றத்தை அடிப்படையாகக்கொண்டு அக்காலப் பகுதியில் விளங்கிய தமிழ் தரகு முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையேயான

www.tamilarangam.net

போக்குகளை எந்தவகையில் ஒப்பிடலாம்? வேறுபடுத்தலாம் ? என்பதில் பலர் பல்வேறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளனர்.

இக் கேள்விகள் 87இற்கு முன்னரும், பின்னரும் என ஆராயப்படவேண்டியவை.

இன்று எமது தேசத்தில் 3 விதமான போக்குகள் நிலவுகின்றன.

1. புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் இலங்கையரசின் இனவாத அடக்குமுறைக்கு உதவும் கரங்களாகி, பாராளுமன்றத்தின் மூலம் உரிமைப் போராட்டம் நடாத்தலாம், புலிகளின் பாசிசத்தை தகர்க்கலாம் என்ற அவநம்பிக்கைவாதத்தில் விதேசியவாதிகளாகச் செயற்படுகின்றனர். இவர்களின் விதேசியப் போக்கினை புரிந்துகொள்ளமுடியாதவர்களாக இவர்களின் சாதாரண உறுப்பினர்களும், மக்களும் உள்ளனர்.

2. குறுகிய தேசியவாதிகளாகவும், அடிப்படையில் பாசிஸ்ட்டுகளாகவும் அரசுடன் போர் தொடுத்துவரும் புலிகள். இவர்கள் மேற்சொன்ன இயக்கங்களைவிட வடக்கு, கிழக்கில் கூடுதலான செல்வாக்கினைக்கொண்டு விளங்குகின்றனர். இவர்கள் மக்களின் விடுதலைக்கு உதவாதவர்களாக இருப்பினும், இன்று இந்த வர்க்க அமைப்பு அரசுடன் சமரசத்துக்குச் சென்று ஏனைய இயக்கங்களை ஒதுக்கிவிட்டு அரசியல் நடத்தக்கூடிய சூழல் இருந்தும், ஏன் இவர்கள் அரசுடன் பேரம் பேசி வருகின்றனர் என்பவைகளெல்லாம் விவாதத்துக்கு உட்படுத்தவேண்டியவை.

இன்று தெற்கில் யு.என்.பி. அரசு மற்றைய கட்சிகளை அடக்கிவிட்டு ஆட்சி நடத்தவில்லையா? அதேபோல் புலிகள் வடக்கு, கிழக்கில் ஆட்சி நடத்த இயலாதா? எல்லாப் போராட்ட நடவடிக்கைகளிலும் குறுகிய அடிப்படையில் செல்லும் புலிகள் இங்கு ஏன் ஆட்சியைப் பகிர்வதில் குறுகிய போக்கில் முடிவெடுக்காமல் போராடுகிறார்கள்? 87 ஒப்பந்தத்திற்குப் பின்னர் புலிகளும், மாற்று இயக்கங்களும் அரசியல் நடத்திய வேளையில் ஏன் மாற்று இயக்கங்களை விட புலிகளுக்கு அங்கத்தவர்களின் சேர்ப்பனவும், மக்களின் ஆதரவு கூடுதலாகவும் இருந்தது? புலி என்ற அவர்களின் வர்க்க முகாமில் எத்தகைய போக்கு நிலவுகின்றது? அங்குள்ள தலைமைக்கும், சாதாரண உறுப்பினர்கட்கும், ஆதரவாளர்களுக்கும் இடையே நிலவுகின்ற உறவுகள் எத்தகையது? என்பவைகள் ஆழமாக நோக்கப்படுவது எமது போராட்டத்தின் இன்றியமையாத அமைவாகும்.

3. இந் நடவடிக்கைகளின் விதேசியத்தன்மைகளை உணர்ந்து போராட்டத்தின்பால் நம்பிக்கையற்றும், நம்பிக்கையுடனும் சிந்தித்து ஒரு கருத்து உடன்பாட்டுக்காக இன்றுவரை போராடிக்கொண்டிருப்பவர்கள். இவர்

www.tamilarangam.net

களது நடவடிக்கைகள் இவர்களை மீண்டும் ஒரு விதேசிய அரசியல் அலைக்குள் கொண்டுசெல்கிறதா? அல்லது தேசிய விடுதலைப் போருக்கான அத்திவாரமிடப் போகின்றதா? இவர்கட்கு இடையேயான கருத்துப் போராட்டமும், விவாதிக்காமல் தமது கருத்தே முற்றுமுழுதும் சரியென்ற நம்பிக்கைவாதமும் எமது போராட்டத்தில் எத்தகைய திருப்புமுனையைக் கொண்டுவரப் போகின்றன? மக்களை இவர்கள் எவ்வாறு வென்றெடுக்கப்போகின்றனர்? தேசத்தில் வலுப்பெற்றிருக்கும் புலிகளின் மேலாதிக்க முகாமை எவ்வாறு நிர்மூலமாக்கப் போகின்றோம்? என்பவைகள் எல்லாம் முழுமையான விவாதத்துக்கு உட்படுத்தவேண்டியவை.

இவைகளே எமது விடுதலைப் போராட்டத்தில் கூர்ப்படைந்துள்ள நிலைகளும், உடனடியாக தீர்வுகாணப்படவேண்டியவையுமாகும். ஏனையவை இதன் அடுத்த கட்ட விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டியவையாகும்.

●

தேவசகாயம்
(ஈழம்)

# குழம்ப வேண்டாம் குழப்ப வேண்டாம்

தூண்டிலின் வளர்ச்சியும், தோற்றமும்.

தூண்டில் பற்றிய விவாதத்தைத் 'தூண்டிலின் போக்கு' ஆரம்பித்துவைத்து இன்று வரை தொடர்ந்துகொண்டிருக்கிறது. 'தூண்டிலின் போக்கும், எமது நோக்கும்' என்ற ப. வி. ஸ்ரீரங்கனின் தூண்டில் பற்றிய பார்வையே எனது பார்வைக்கான உடனடிக் காரணமாகும்.

கடலோடிகள் எந்த ஒரு அரசியல் நோக்கமோ, கொள்கையோ, வேலைத் திட்டமோ முன்வைத்து தூண்டிலை ஆரம்பிக்கவில்லை. இதைத் தூண்டில்களில் காணமுடிகிறது. அதாவது தூண்டிலின் தோற்றத்திற்கான ஆரம்ப அடிப்படையாக அமைந்தது 'எதாவது செய்தாக வேண்டும்' என்பதேயன்றி, 'இது தான் செய்தாகவேண்டும்' என்பதாக இருக்கவில்லை.

www.tamilarangam.net

ஆரம்பத்தில் புலம்பெயர்ந்தவர்களிடையே இருந்த முரண்பாடுகள், வாழ்நிலை பற்றிய கருத்துகளையே பெரும்பாலும் தூண்டில் கொண்டிருந்தது. பின்னர் படிப்படியான கடலோடிகளின் அரசியல் ரீதியான வளர்ச்சிகளும், புலம்பெயர்ந்த முற்போக்கு எண்ணங் கொண்டவர்களின் தொடர்புகளும் இலங்கையில் அசுரவேகத்தில் சென்று - கொண்டிருந்த அராஜகப்போக்குகளும் தூண்டில் ஒரு அரசியல் சஞ்சிகையாக வளர்ச்சியடைவதற்கான காரணங்கள் எனலாம்.

தூண்டில் ஆற்றும் பணி என்ன?

இன்று மேற்கு ஜேர்மெனியில் சுமார் 15 சஞ்சிகைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. காலஞ்சென்ற தமிழ்த் தலைமைகளிலிருந்து, இறந்து கொண்டிருக்கின்ற 'விடுதலை' இயக்கங்கள் வரை கூறிவரும் 'வேத வாக்கியங்களான' தமிழ் பேசும் மக்களின் அவல வாழ்வினை எழுதி ஒப்பாரி வைக்கின்றனர். ஆனால் பெரும்பாலான சஞ்சிகைகள் ஏதாவதொரு இயக்கத்தின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இயக்கங்களின் அராஜக நடவடிக்கைகள், இலங்கையரசின் இன ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கு ஒப்பாரி வைக்கின்றன. ஆனால் இவ் அராஜக இயக்க அல்லது இயக்கங்களுக்கு மாற்றீடாக அல்லது இத்தகைய இயக்கங்களை விமர்சிப்பதன் மூலம் எதிலுமே வேறுபடாத இன்னொரு அராஜக இயக்கத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ புரட்சிகர அமைப்பாக பிரகடனப்படுத்துகின்றனர். அதாவது தமிழ் பேசும் மக்களின் நலன்களில், அவர்களது அபிலாசைகளில் எதுவித அக்கறையுமில்லாது எந்தெந்த வடிவங்களில் சமூகம் முன்னேறுகின்றதோ, எந்தெந்த வடிவங்களுக்கூடாக மக்களின் அபிலாசைகளுக்கான, அராஜகத்துக்கு எதிரான போராட்டங்கள் முனைப்புப் பெறுகின்றதோ அவ்வாறான நடவடிக்கைகளையே இறந்துகொண்டிருக்கின்ற இயக்கங்களும், அதன் ஆதரவாளர்களும் பயன்படுத்துகின்றனர். இதன் வெளிப்பாட்டையே மேற்கு ஜேர்மெனியில் வெளிவருகின்ற பிரவாகம், ஏலையா, கதிர், வெகுசனம், சிந்தனை தேனீ, அக்னி போன்ற சஞ்சிகைகள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

மேற்கூறப்பட்ட சஞ்சிகைகளிலிருந்து தூண்டிலைப் பிரித்து பார்க்கவேண்டிய அவசியத்தை மேற்குறிப்பிட்ட சஞ்சிகைகள் எமக்குத் தந்திருக்கின்றன. தூண்டில் எந்த இயக்கத்தையும் - சாராமல் இலங்கையரசின் இனவொடுக்குமுறைக்கு எதிராகவும் அனைத்து இயக்கங்களின் அராஜகங்களுக்கு எதிராகவும், மக்கள் நலனில் அக்கறையற்ற சந்தர்ப்பவாத போக்குகளையும் தொடர்ச்சியாக அம்பலப்படுத்துகின்றது. சுதந்திரமாக தமது கருத்துகளைத் தெவிக்க முடியாமல் மௌனிகளாக்கப்பட்டவர்கள் தமது கருத்துகளை வெளிக்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொணர்வதற்கான களமாக விளங்குகிறது. தூண்டில் புலிகளை விமர்சிப்பதையே தனது தொழிலாகக் கொண்டுள்ளது என்ற விமர்சனம் முன் வைக்கப்படுகின்றது. தூண்டில் அரசியல் சஞ்சிகையாக வளர்ச்சியடைந்ததிலிருந்து இற்றைவரையான தூண்டில்களைத் திருப்பிப் படிப்பதன் மூலம் இத்தகைய விமர்சனங்களை முன்வைப்பவர்கள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ளலாம்.

இன்று புலிகளின் அரசியல் (?) நடவடிக்கைகளும், அராஜக நடவடிக்கைகளும் முக்கியத்துவம் பெற்றிருப்பதால்தான் புலிகளின் நடவடிக்கைகளுக்கு — தூண்டில் முக்கியத்துவம் அளிக்கிறது என நினைக்கிறேன். தூண்டில் அனைத்து இயக்கங்களின் கண்காணிப்புக்குள்ளும், இயக்கங்களுக்கு வக்காலத்துவாங்கும் சஞ்சிகைகளின் ஆரோக்கியமற்ற, காழ்ப்புணர்வான விமர்சனங்களுக்கும் உள்ளாகின்றது என்பதை வாசகர்கள் அவதானித்திருக்கலாம்.

தூண்டில் சமூக மாற்றத்தை அடிப்படையாக வைத்து வெளிவரும் சஞ்சிகையா?

தூண்டிலின் இயக்கப்பாட்டின் வாயிலாக தூண்டில் கொண்டிருக்கும் வர்க்க உணர்வுள்ள வாசகர்களையாவது தூண்டில் தன் ஆளுமைக்கான நிலைமைகளுக்குப் பயன்படுத்தியுள்ளதா? இல்லை! என ப.வி.ஸ்ரீரங்கன் குறிப்பிடுகிறார்.

தூண்டிலை சமூக மாற்றத்திற்குரிய வெகுசனப் பத்திரிகையாக வர்க்க உணர்வுள்ள வாசகர்கள் கருதவில்லை. ஒரு சமூகமாற்றத்தைக் கோரி நிற்கும் வெகுசனப் பத்திரிகையானது ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்களின் விடுதலைக்கான கட்சி சார்பான பத்திரிகையாகும். இது கட்சி சார்பான கொள்கைகள், வேலைத் திட்டங்களை முன்வைத்து வர்க்க உணர்வுள்ள சக்திகளை கட்சியின் கீழ் ஒழுங்கமைப்பதற்கான ஊடகமாக விளங்குகிறது. புரட்சிகரக் கட்சியும், குறைந்தபட்சம் சூழ்நிலைக்கேற்ப வேலைத் திட்டமும் இன்றி வர்க்க சக்திகளை 'ஆளுமைக்கு' கொண்டு வருதல் என்பது வெறும் கனவுதான்.

அராஜகத்துக்கு எதிரானதும், இன்றைய எதிர்கால அரசியல் விவாதக் களமானதுமான தூண்டில் சமூக மாற்றத்திற்கான முன்னநகர்வாக தன்னைக் காட்டி வந்துள்ளது என்ற ப.வி. ஸ்ரீரங்கனின் கருத்தானது தூண்டில் பற்றிய அவரது மிகையான பார்வையையே காட்டுகின்றது.

'தன்னார்வம்', 'மிகையான கற்பனை', 'குத்தகை' போன்ற இவர் பாவித்த சொற்கள் ஐரோப்பாவில் எப்படி நாம்வாழ்கிறோம்? இங்கு எம்முடைய மனோநிலைகள் என்ன? குறைந்தபட்சம் ஐரோப்பாவில் (நாட்டுக்கு நாடு சிறிது வித்தியாசப்படலாம்) இருப்பவர்கள் என்ன செய்யக்கூடிய நிலை இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கின்றது? என்பதை அனுபவ ரீதியாகச் சந்திக்கச் சந்தர்ப்பமற்ற மனோகரனின் (புதிய ஜனநாயகம் இதழில் வெளியான — பாஸிஸ்டுகளே சிந்தனையைச் சிறையிட முடியுமா? என்ற விமர்சனம்) தாக்கமோ?

பல முனைத் தாக்குதல்களாக அராஜகம் எமது குரல்வளையை நெரித்துக் கொண்டிருக்கும் நிலையிலும் தூண்டிலில் விவாதத் தொடரில்—ஈழத்திலிருந்தும், வெளியிலிருந்தும் பங்குபற்றுபவர்கள், அராஜகங்களுக்கெதிராகக் குரல் கொடுப்பவர்கள் திண்ணைவாசிகளாகவும், திண்ணைப் பேச்சாளர்களாகவும் — தெரிகிறார்கள் என்றால் ப. வி ஸ்ரீரங்கனின் இன்றைய நிலையை ஒவ்வொருவரும் இலகுவாகப் புரிந்துகொள்ளலாம்.

எனவே இன்றைய சூழ்நிலையில் தூண்டில் தொடர்ந்தும் தன் பணியை ஆற்றும் அதே வேளை, வெறுமனே நிகழ்வுகளை விமர்சிப்பதுடன் நின்று விடாமல் அடுத்த கட்ட நகர்வு குறித்த தங்களது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும். பிரச்சினைக்கான தீர்வை இங்கிருந்து நாம் சொல்ல முடியாதென்பது மிகவும் குழந்தைப் பிள்ளைத்தனமானது.

உலகம் இரு பெரும் வர்க்கங்களாகப் பிளவுண்டு மோதிக்கொண்டிருக்கிறது. கொடூரச் சுரண்டல்களினாலும், ஒடுக்குமுறைகளினாலும், போலி சோசலிஸ்டுகளினாலும் உழைக்கும் மக்கள் கூட்டம் தெருவுக்கு வந்துகொண்டிருக்கும் நிலையில், இம் மக்களுக்கான தீர்வை தூண்டிலால் — வைக்க முடியாதா?

எமது உழைப்பும், உணர்வும் நாம் சார்ந்து நிற்கும் மக்களை பிரதிபலிக்குமானால், நாம் அந்த மக்களுக்கான விடுதலைப் பாதையை தெளிவுபடுத்தலாம் என்றே நான் நினைக்கின்றேன். அத்துடன் வர்க்க உணர்வுள்ள சக்திகள் புரட்சிகர வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக தம்மைத் தத்துவார்த்த ரீதியாக வளர்த்துக் கொள்வதுடன், தமக்குள் குறைந்தபட்ச வேலைத்திட்டத்துடன் ஐக்கியப்பட வேண்டும்.

தூண்டிலின் அரச, இயக்க பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவளித்து தூண்டிலை விமர்சன, விவாதங்களுக்கூடாக வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லவேண்டும். இதற்காக சலிப்புத் தன்மையில்லாமல் தொடர்ந்தும் தம்மை ஈடுபடுத்த வேண்டும்.


இயக்கங்களினால் வாழ்வைத் தொலைத்தவர்கள், வாழ்வைத் தொலைத்தும் தொடர்ந்து போராட முடியாமல் முடக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணக் குமுறல்களை வெளிப்படுத்தும் களமாகத் தூண்டில் இருப்பதனால் அதற்காகவாவது தொடர்ந்தும் வெளிவரவேண்டும்.

(தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




38ஆவது கலத்தில் வெளிவந்த குறிப்புகளைப் படித்துவிட்டு என்னைச் சந்தித்த நண்பர் ஒருவர் கேட்டார் "ஏன் மூண்டாவது கேள்விக்குப் பதில்சொல்லாமல் விட்டிட்டாய்" என்று.

எனக்கு உடனே புரியவில்லை. மூன்றாவது கேள்விக்கு — ஏன் பதில் சொல்லவில்லை என்று திடீரெனக் கேட்டதும் என்னால் அவர் எதைக் கேட்கிறார் எனப் புரிந்துகொள்ளமுடியவில்லை.

"என்ன அது மூண்டாவது கேள்வி?" என்றேன் நான்.

"இவ்வளவு பிழையான இயக்கத்துக்கு எமது போராட்டத்தின் தலைமை கிடைத்ததிற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா? அல்லது நாம்தான் பிழையாக யோசிக்கின்றோமா ? என்று வெளிநாட்டு நண்பர் ஒருவர் கேட்டதாக எழுதியிருந்தாயே.. அதுதான்"

"ஓ.. அதுவா? அதைப் பற்றிக் காரணத்தோடை தான் நான் எழுதவில்லை. யாராவது ஏதாவது கருத்து முன்வைக்கிறார்களா என்று பார்ப்போம் என்று யோசித்தேன். தவிரவும் — அந்தக் கேள்விக்கு இதுவரைஎழுதியவை கருக்குள்ளேயே பதில் வந்திருக்கிறது என்று நினைக்கின்றேன்" என்றேன் நான்.

"என்ன பதில்?" என்றார் நண்பர்.

எனக்கு இது தொடர்பாக எமது அரசியல் நண்பருடன் விவாதித்தவைகள் ஞாபகத்திற்கு வந்தன. அவர் புலிகள் போராட்டத்தின் தலைமைக்கு வந்ததிற்கு என்ன காரணம் இருக்கிறது என்று அவ்வப்போது நாம் பேசியதையும் — அதுபற்றி நான் தூண்டிலில் எழுதியதையும் பற்றிச் சொல்லி இது ஒன்றும் மேலதிகமாக விளக்கப்படவேண்டிய கேள்வி அல்ல என்று சொல்லியிருந்தார்.

பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கோலை செய்

www.tamilarangam.net

யப்பட்டதற்கு மறுநாள் எமது இந்த உரையாடல் நடைபெற்றது. ரஞ்சனின் கொலையுடன்தான் இந்த உரையாடல் ஆரம்பமாகியது.

"ரஞ்சனை யார் கொன்றிருக்கலாம் எண்டு நினைக்கிறாய்?" என்று கேட்டேன் நான்.

"யார் செய்தது என்று ஆராய்வது என்னைப் பொறுத்தளவில் அவ்வளவு முக்கியமில்லை. ஆனால் ஒன்று தெளிவு. புலிகள் இதைச் செய்திருக்க முடியாது!"

"என்னண்டு அவ்வளவு நிச்சயமாய் சொல்லுறாய்?"

"ஒண்டு அது நடந்த இடம். அது புலிகளின் நடமாட்டத்திற்கு அவ்வளவு இலேசான இடமில்லை. இரண்டாவது அங்கு பாவிக்கப்பட்டிருக்கக்கூடிய வெடிமருந்தும், அது வெடிக்க வைக்கப்பட்டிருக்கும் முறையும். றிமோட்கொன்றோல் முறை மூலம் - வெடிக்கவைக்கப்பட்டிருக்கும் இந்தக் குண்டு வெடிப்பைச் செய்யும் உயர்ரக எலக்ரோனிக்வெடிப்பு முறை அவங்களுக்கு இன்னமும் சாத்தியமாகவில்லை"

"அப்ப இதை ஆர் செய்திருக்கலாம்?"

"ஒன்றில் கசினோக்காறர் அல்லது யு.என்.பி. கட்சியின் மேல்மட்டம். பிரேமதாச அல்லது அவனது மனைவியின் கையாட்களால் இது நடந்திருப்பதற்கான வாய்ப்புத்தான் அதிகம்"

"அதெப்படி? அப்பிடிச் செய்வதற்கு அவர்களுக்கு ரஞ்சன் மீது என்ன வெறுப்பு இருந்தது?"

"இது வெறுப்பு மட்டும் சம்பந்தப்பட்டது அல்லவே. பல மேல்மட்ட முக்கிய புள்ளிகளுக்கும், கசினோக்காறருக்கும் இடையில் காசு கைமாறியிருப்பதாக தெரியவருகிறது. அதற்காகக்கூட நடந்திருக்கலாம்! இந்தப் பிரச்சினையை அரசு அக்கறையா விசாரிக்குதா இல்லையா என்று பொறுத்திருந்து பார். அப்ப தெரியும். ரஞ்சன்ரை இடத்துக்கு இன்னும் தனக்கு நல்ல நம்பிக்கையான ஒருத்தனைத்தான் பிரேமதாச நியமிப்பான்"

"ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?"

"பிரேமதாசவின்ரை அரசுதான் பாராளுமன்றமும், மந்திரி சபையும் வெறும் பொம்மைகள் என்டதை மக்களுக்கு தெளிவா நிரூபிச்சது. பிரேமதாசவுக்கு இராணுவத்தின் மத்தியில் ரஞ்சனுக்குப் பெருகி வரும் ஆதரவு தொடர்பான அச்சம் இருந்து வந்திருக்கிறது. எப்படியோ ரஞ்சன் கொல்லப்பட்டது உள்வீட்டுச் சதிதான் என்றே நான் நினைக்கின்றேன். ஆனால் இப்ப அது முக்கியமில்லை. ரஞ்சன் செத்தது ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்துமா என்பதுதான் முக்கியம்!"

"நீ என்ன நினைக்கிறாய்..?" இது நான்.

www.tamilarangam.net

"ஒரு மாற்றமும் வராது. ஒருவேளை புலியள் பேச்சுவார்த்தைக்குத் திரும்பவந்தால், இதுவரை அதை நிபந்தனைகள்போட்டு மறுத்து வந்த ரஞ்சன் இல்லாததால், பேசுவது சற்றுச் சுலபமாக இருக்கலாம்! மற்றப்படி வேறொன்றும் நடக்காது! அரசு எப்படியோ யூன், யூலைக்குள் நிலைமையை எப்பிடியாவது முடிவுக்குக்கொண்டு வந்து பேச்சுவார்த்தை நடத்த வேணும் எண்டு நினைக்குது..."

"ரஞ்சன்ரை கொலையை பற்றி மற்றத் தமிழ்க் கட்சியள் என்ன சொல்லுமோ தெரியாது"

"என்ன சொல்லும்? ஒரு நேர்மையான, கண்ணியமான மனிதர் கொல்லப்பட்டுவிட்டார். இக் கொலை ஒரு காட்டுமிராண்டித்தனமான கொலைதான் என்று சொல்லும்!"

"ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?"

"பின்னை என்ன? இந்த இயக்கங்களின்ரை அரசியல் அப்பிடித்தானே சொல்லவைக்கும். புலியளை அழிக்கிறதிலை இவையளுக்கு நல்ல கூட்டாளியா செயல்பட்டவன்தானே ரஞ்சன். இவங்களுக்கு எப்பிடியும் செஞ்சோற்றுக்கடன் இருக்கும்தானே!"

"ரஞ்சன் இறந்தது அரசுக்கு ஒருவகையிலை நட்டம் இல்லையா?"

"அப்பிடிச் சொல்லேலாது. அரசு தன்னுடைய போலித்தன்மையைப் பாதுகாக்கவும், தன்னை மக்கள் மத்தியில் இன்னமும் நம்பிக்கைக்குரிய ஒன்றாக காட்டவும் இப்பிடி ஒன்றிரண்டு தீவிரமானவர்களை ஒழிப்பதனையும் ஒரு வழிமுறையாகக் கையாளும். ரஞ்சன் ஒரு நேர்ப்படியான அரசின் குணநலனை வெளிப்படுத்தும் ஒருவகைமாதிரியாக இருந்தான். இப்போக்கு சிறுபான்மையினங்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் ஒருவகையில் அரசுக்கு எதிரானபோக்கை வளர்க்க உதவியிருக்கிறது. அரசுக்குப் பல லாபங்கள் இருந்தபோதும் முடி மறைக்காது நேரடியாகவே திமிர்த்தனமாக பேசும் ரஞ்சன் அரசின் போலித்தனத்தை அம்பலப்படுத்தும் ஓர் எதிர்மறையாளனாகவும் இருந்தான்! எனவே இவனது மரணம் அரசுக்கு முழுதாக நட்டம் என்று சொல்லமுடியாது. புலிகள் தமக்குள் களையெடுப்பு, பகிரங்கத் தண்டனை என்பவற்றை வழங்குவதன் மூலம் ஒரு புனிதத் தன்மையை பேணுவதுபோல, இதுவும் அரசுக்கு லாபம் தரத்தான் செய்கிறது"

"அதென்ன களையெடுப்பு எனக்குப் புரியவில்லையே?"

"இப்போது புலிகளுக்கு உள்ளே பரவலாகப் 'பதவிபறிப்பு', 'தண்டனை' என்பன நடைமுறைக்கு வந்துள்ளன. மூர்த்தி, செங்கதிர் போன்றவர்கள்கொல்லப்பட்டதாகவும், பானு போன்றவர்கள் பதவி இறக்கப்பட்டுள்ளதாயும் தகவல்கள் கிடைக்கி

www.tamilarangam.net

ன்றன. இது அவர்களது ஸ்தாபனத்தின் 'புனிதத்'தன்மையை பாதுகாக்கப் பயன்படுகிறதுதானே! மோசமான தனிநபர்களை, சீரழிந்த பண்பு கொண்டவர்களைத் தம்முடன் முரண்படுகிறவர்களை... எல்லாம் மக்கள் விரோதச்செயல்களில் ஈடுபட்டதால்' தண்டனை' வழங்குவதாகச்சொல்லி கொலை செய்வதன் மூலம் புலிகள் தமது 'புனிதத்'தன்மையை பேணி வருகிறார்கள். செங்கதிர் போன்ற ஒரு அராஜக நடைமுறை உள்ள உறுப்பினரை கொல்வது புலிகள் மீதான 'மதிப்பை' அதிகரிக்கவைக்கும்தானே?"

"நல்ல ஐடியாதான். செங்கதிர் போன்றவர்களைத்'தண்டிப்பதன்' மூலம் அவர்கள் செய்தவை புலிகளின் நடவடிக்கை-யாகாது என்று மக்களுக்கு காட்டலாம்தானே!! புலித்தலைமைகளின்ரை கட்டளைகளைத்தான் செங்கதிர் போன்றவர்கள் நிறைவேற்றினார்கள் என்று யார் பார்க்கப் போகிறார்கள். பிரேமதாசவும் புலியளிட்ட கொஞ்ச விசயம் படிச்சுத்தான் இருக்கிறான்"

"புலிகள் எமது மக்களின் 'விடுதலை'க்கு தலைமை தாங்குபவர்களாக வந்தது எப்படி என்பது பற்றிய உனது வெளிநாட்டு நண்பரின் கேள்வி எனக்கு ஞாபகம் வருகிறது!"

"அந்தக் கேள்வி பற்றி நாம் ஏற்கெனவே பல தடவைகள் பேசியிருக்கிறோம். தூண்டிலில் 'நூறு பூக்கள்' என்டு அந்தப் பிரச்சினை பற்றி விவாதம் நடக்குதுதானே!"

"உனது நம்பிக்கைகளை நினைக்க எனக்குச் சிரிப்புத்தான் வருகுது. தூண்டிலில்லை என்ன விவாதம் நடக்குது? எழுதுறவர்கள் பிரச்சினையைத் தொடுகிறார்கள் இல்லை. தொடுபவர்களோ பிரச்சினையைச் சரியாகப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. உண்மையான அக்கறையுடன் இதில் பங்குபற்றவேண்டியவர்கள் ஒருதரும் பங்குபற்றவேயில்லை"

"சரி விடு. அதுதான் நிலைமை. எமது மொழிக்கும், புத்திஜீவிகளுக்கும் அந்தப் பாரம்பரியம் இல்லை. 'கண்டனம்'மூலம் ஆரம்பமான எழுத்துத்தானே எமது தமிழ் எழுத்து. ஆனால் அவசரப்படவேண்டியதில்லை. மெல்ல மெல்ல வரும்... "

"நீ நம்பிக்கையோடை எழுது. பார்ப்போம். ஆனால் இந்த மூன்றாவது கேள்வி இருக்கே, அது அவ்வளவு ஆழமாக யாராலும் உணரப்பட்டேலை என்றே நினைக்கிறேன்"


"எனக்கு விளங்கேலை"

"அதாவது உந்தக்கேள்வி இருக்கிற மாதிரி யாரும் அல்லது பெரும்பான்மையானவர்கள் சிந்திக்கவில்லை. மற்ற இயக்கங்கள் தாம் தோல்வி அடைந்தது புலிகளின் அராஜக நடவடிக்கையால் என்று நினைக்கின்றன. தாம் எப்போதும் சரியாகவிருந்ததாகவே அவை நினைக்கின்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ள. தமது தவறு என்று ஏதாவது இருக்குமென்றால் அது முன்கூட்டியே தாம் புலியை அழிக்காமல் விட்டதுதான் என்றே அவை கருதுகின்றன. ஆனால் ஏன் தம்மால் வெல்லமுடியாமல் போனது என்று அவர்களால் ஒருபோதும் சிந்திக்கமுடிவதில்லை.."

"உண்மையில் இவர்களால் வெல்ல முடியாமல் போனது ஏனென்டு சொல்கிறாய்?"

"ஒன்று இவங்களுக்குத் — தாம் என்ன செய்கிறோம் என்பது தெளிவில்லாமலிருந்தது. புலிகள் வெறும் இராணுவக்குழுவாக வளர்ந்தபோது, இவர்கள் மக்கள், மக்கள் போராட்டம் என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டார்கள். ஆனால் அப்பிடிச்—சொல்லிக்கொண்டபோதும் இவர்களுக்கும் மக்கள் மீது நம்பிக்கை இருக்கவில்லை. ஒன்றில் இந்தியாவிலோ அல்லது துப்பாக்கிகள் மீதோதான் நம்பிக்கை இருந்தது..மக்கள் மத்தியில் நிலவிவந்த அதே அரசியல் உணர்வுகளை அப்படியே பேணியபடி மக்கள் போராட்டம் பற்றி இவர்கள் பேசினார்கள். கொஞ்சமும் தர்க்கப் பொருத்தமில்லாத இது தவிர்க்கமுடியாமலே சிதைந்து போயிற்று. புலிகளோ மக்களது கடந்தகால நிலையை தொடர்ந்து பேணியபடி அவர்களை உய்விக்கவந்த வீரர்களாகத் தம்மை நிலைநிறுத்திக்கொண்டார்கள். உண்மையில் புலிகள் தமிழ் மக்களது தலைமையாகியதில் எந்தப் புதுமையும் இல்லை. அது ஏற்கெனவே இருந்து வந்த அதே அரசியல் தலைமை தான். ஆட்கள்தான் மாறியிருக்கிறார்கள். கூட்டணியின் இடத்தை புலி பிடித்துக்கொண்டது அவ்வளவுதான்!"

www.tamilarangam.net

"நீ சொல்வதின்படி மற்றவர்கள் தோற்றுப்போனதிலும் புதுமையில்லைத்தானே!"

"ஓம். அதிலும் எந்தப் புதுமையுமில்லை. ஆனால் ஒண்டை கவனிச்சுப் பார். மக்கள் போராட்டம் என்று சொன்னவர்கள் எல்லோரும் ஒரு விதத்திலை மக்களுக்கும் போராட்டத்திற்கும் ஏதோ ஒருவகையிலாவது தொடர்பு இருக்குதெண்டு நினைத்தார்கள். அவர்களை அணி திரட்டவேணும், அவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்தவேணும் என்று கருதினார்கள். ஆனால் அவர்களுக்கு அதை எப்பிடிச் செய்யிறதெண்டுதான் தெரியேலை. ஏற்கெனவே நிலவிவந்த சிந்தனைப் போக்கு இவர்களையும் அள்ளிக்கொண்டு போய்விட்டது...

புலியளின்ரை அரசியலைப் பொறுத்தவரையில் அதுஎந்தவிதமான மாற்றத்தையும் கோரவில்லை. இராணுவத்தை விரட்டுவது,'தமிழீழ அரசை'! அமைப்பது என்பனவே அதற்குக் குறிக்கோளாகவிருந்தது. தான் அமைக்கப் போகும் அரசு எப்படி இருக்கப்போகிறது என்பது பற்றி அதற்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. ஏற்கெனவே நடப்பிலிருக்கும் ஒடுக்குமுறை அரசுகள் தான் அதற்கு ஆதர்சம். சிங்கள இனவெறி மட்டும் இல்லையென்றால் இலங்கையரசையிட்டு புலிகளுக்கு வேறெந்த விமர்சனமும் இருந்திருக்காது. எனவே அது மக்களிடையே எந்த அரசியல் வேலையும் செய்யவேண்டியதில்லை! அது ஏற்கெனவே கடந்த 40 வருடங்களாக அல்லது அதற்கும் மேலாக செய்யப்பட்டு வந்துள்ளதாலும் அதுவே மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்துவதாக இருந்ததாலும் அவர்களது 'பணி' மிகவும் இலகுவானதாகவிருந்தது. யுத்தம் என்பது அரசியலின் நீட்சி என்பார்களே அது போல 40 ஆண்டுகால தமிழ் அரசியலின் நீட்சியாக இந்த யுத்தம் நடக்கிறது. அதனால் தான் இந்த யுத்தத்திற்கும் அந்த அரசியலுக்கேயுரிய தடுமாற்றமும் இருக்கிறது"

நான் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். எனக்கு மக்கள், விடுதலை, புரட்சி என்று பேசிய இயக்கங்களின் கடந்த கால நடவடிக்கைகள் ஞாபகத்திற்கு வந்தன. அவர்களில் யாருக்குமே போராட்டத்தில் மக்களின் பங்கு என்பது விசுவாசமான ஆதரவாளர்களாக இருப்பது தான் என்பதற்கு மேல் எதுவும் தெரிந்திருக்கவில்லை.

மக்கள் பங்களிப்பு என்பது உண்ணாவிரதமும், ஊர்வலமும் தான். மக்கள் விடுதலை அரசியலில் உணர்வுபூர்வமாக திரட்டப்படுவதற்கான எந்த முயற்சியையும் இந்த இயக்கங்கள் மேற்கொள்ளவில்லை. இந்தியாவின் வரவை எதிர்பார்த்து வாய்பார்த்திருந்ததுதான் இவற்றின் நோக்கமாகவிருந்தது. இந்தியாவை சாராத ஒன்றிரண்டு இயக்கங்கள்கூட எந்தத் தெளிவும் இன்றியே இருந்தன.

www.tamilarangam.net

ஒருவகையில் இவை எல்லாவற்றிடமுமே தாம் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்ற அடிப்படை நம்பிக்கை இல்லையென்றே எனக்குப்பட்டது. புலி முதல் பேரவை வரை யாருக்குமே அரசு அமைப்பது பற்றிய தீவிர சிந்தனையோ, நம்பிக்கையோ இருக்கவில்லை. இவைகளின் திட்டம், செயல் அனைத்துமே ஒரு வகை அமுக்கக் குழுக்கள் (Presure Groups ) போலவே இருந்தன. தமது நடவடிக்கை யாராவது – குறிப்பாக இந்தியா – தலையிட்டு நிலைமையை மாற்றும் என்ற நோக்கிலமைந்தவையாகவே இவை வகுத்துக்கொண்டன. இதில் வேடிக்கை என்னவென்றால் பேரவை, என். எல். எவ். ரி போன்றவற்றின் சிந்தனையில் இந்திய எதிர்ப்பு இருந்தபோதும் நடைமுறை ஏதாவது அற்புதம் ஒன்றை எதிர் நோக்கி செயற்படுவது போலவே அமைந்திருந்தது. இது ஏன் என்பதுதான் எனக்குப் புரியாத குழப்பமாக இருந்தது. நண்பரை இடைமறித்து இதுபற்றிக் கேட்டேன்.

"விளக்கமாகச்சொல்லு. நீ கேக்கிறது விளங்கேலை" என்றார் நண்பர்.

"நான் சொல்லுறது உனக்கு விளங்கேலையோ? பொதுவாய் நீ கதைக்கிறதுதான் விளங்கிக்கொள்ள முடியாதபடி குழப்பமாக இருக்கும்" என்றேன் நான்.

"சரி விசயத்துக்கு வா" என்றார் நண்பர் சிரித்தபடி.

"இல்லை. ஒரு புறம் புலியள் பழைய கூட்டணி அரசியலை முண்டு கொடுத்துக்கொண்டு போராடி தலைமைக்கு வந்தார்கள். மற்றப் பக்கம் இதைத்தவறெண்டு சொல்லிக்கொண்டு மக்கள் போராட்டம் எண்டும் – கொஞ்சப் பேர் வந்திச்சினம். இவையளாலை ஒரு அரசியல் போக்கை உருவாக்கவே முடியவில்லை. தமக்கெண்டு சொந்தமாக ஒண்டும் இல்லாமல் ஒரு எதிர்க்கட்சியினைப் போல புலியளை விமர்சிப்பதன் மூலம் அரசியல் நடத்திவிடலாம் எண்டுபாத்தினம். ஆனால் எல்லாற்றை அடிப்படையிலயும் தம்மாலை எதும் செய்யமுடியாது எண்டபோக்குத்தான் நிலவியிருக்குது. இது ஏன் எண்டுதான் விளங்கேலை"

"இதுதான் எங்கடை பிரச்சினையே. கூட்டணியின் அரசியல் அதிகாரத்தில் பங்குகோருவதே ஒழிய தமிழீழம் அமைப்பதற்கல்ல. இருக்கிற அரசு இனரீதியான பாகுபாட்டைக் காட்டுவதை தவிர்க்கும் எண்டால் அதாவது தமிழ் முதலாளியளுக்கும் சுரண்டலிலை பங்கு தருமெண்டால் சமரசம் செய்யக் கூட்டணி தயார். உண்மையிலை அதிகாரத்திலை பங்கு கோருவதன் அடிப்படையே அதுதான். அது தனியான அரசு ஒன்றை அமைக்கும் அளவுக்கு போராடும் தன்னம்பிக்கையற்ற அரசியல். அதுதான் நான் முதல்லை சொன்னபடி புலியளின் போராட்டம் திரும்பத் திரும்ப

www.tamilarangam.net

ஒரே இடத்திலேயே நிற்குது . அது தடுப்பு யுத்த மட்டத்திற்கு மேல் முன்னேற முடியாதென்று அதுதான் சொன்னேன்"

"அப்ப மற்ற இயக்கங்கள்....?"

"மற்ற இயக்கங்கள் தமிழரசுக் கட்சியினதும், இடதுசாரி கட்சியினதும் வெவ்வேறு அளவுகளிலான கலவைகள். எமதுநாட்டு இடதுசாரிக் கட்சிகளோ ஒரு காலமும் இந்த நாட்டின் புரட்சிக்காகப் போரடினவையல்ல. தொழிலாளர் நலன் பேணும் கட்சிகளாக, சனநாயகப் போராட்டங்களை, தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்தியவையாகவே இருந்தன. யாருக்குமே அரசு அதிகாரம் பற்றிய எண்ணம் இருக்கவில்லை. ஆளும் கட்சிகளுடன் பேரம் பேசும் அரசியலையே இடதுசாரிக்கட்சிகளும் கொண்டிருந்தன. எனவே இவை இரண்டினதும் கலவைகளாகவந்த மற்ற இயக்கங்களாலும் அதை மீற முடியவில்லை. இந்த இடதுசாரிக்கட்சிகளை விமர்சித்துத்-தான் புதிய இடதுசாரி இயக்கங்கள் தோன்றினவாயினும், பழைய இடதுசாரிக்கட்சிகளின் அடிப்படைகளை விமர்சிக்காமல் - தோற்றங்களை விமர்சித்துக் - கொண்டே இவைகள் இயங்கத் தொடங்கின. விளைவு எப்படி இருக்கும்? பலாக்கொட்டை தாக்க சுரைக்கொட்டை முளைக்கு-மா?"

"ஆனால் இவ்வளவு கால அனுபவத்துக்குப் பிறகும் அது மாறினதாகத் தெரியவில்லையே?"

"மாறவில்லை. மாறாகத் தொடங்கிய இடத்துக்கேபோய் விட்டுது! பழையபடி பாராளுமன்றத்திற்குப் போய்விட்டார்கள்! திரும்பவும் 'சனநாயக' உரிமை போர் நடாத்துவார்கள்"

"அப்ப ஒட்டுமொத்தமா புதிய சமுதாயம், அரசு இவை பற்றி யாருமே சிந்திக்கவில்லை என்கிறாயா?"

"சிந்திக்கவில்லை என்று சொல்லேலாது. ஆனால் சிந்தனை பழைய சிறைகளை மீறிச் செல்லவில்லை. திரும்பத் திரும்ப ஒரே பாதையில்தான் சிந்தித்-தார்கள். தமது சிந்தனை முறையை யாரும் கேள்விக்குள்ளாக்கவில்லை"

நான் எதுவும் பேசவில்-லை. இது பற்றிய எனது கருத்துகள் கிட்டத்தட்ட ஒத்திருந்ததால் மெளனமாக இருந்தேன். புலிகளை 'தேசிய முதலாளிய சக்திகள்' என்று நண்பர் சொன்னது தொடர்பாக ஒருவர் தெரிவித்த கருத்து எனக்கு ஞாபகம் வந்தது. புலிகளை பாஸிஸ்டுகள் என்றும் இல்லை என்றும் , தேசியத்தன்மை இருக்குது அல்லது இல்லையென்றும் விவாதித்து கொண்டிருக்கிறதிலை என்ன லாபம் இருக்குது? இதுவும் திரும்பத் திரும்ப புலிகளை விமர்சித்தபடியே இருக்கிற ஒன்றுதானே ? உண்மையிலை இப்ப நாங்கள் என்ன செய்யவேணும்? எது செய்யிறது சரி? என்டு சொல்லுங் - கோ. அதுதானே முக்கியமென்று

www.tamilarangam.net

ம் அவர் என்னைக் கேட்டார். எனக்கும் சரி போலத்தான்பட்டது. இதையும் நான் நண்பரிடம் சொல்லிவைத்தேன்.

"... சரிதான். ஒரு வகையிலை நாங்களும் சிந்தனை சிறையிலையிருந்து விடுபடேலை-யோ என்று எடுத்துக் காட்டுற ஒரு கேள்விதான் இது. ஆனால் நாம் என்ன செய்ய வேணும் என்று தீர்மானிக்கிறது சமகால அரசியல் சக்திகளை மதிப்பிடுவதிலிருந்து பிரிக்க முடியாதது. மதிப்பீடு இல்லாமல் ஒரு முடிவுக்கும் வரமுடியாது! உதாரணமா எதிரி யார் என்று தீர்மானிக்-காமல் சண்டையிட முடியுமா? எனவே நாங்கள் அது பற்றிப் பேசினது தப்பில்லை. ஆனால் அது மட்டுமல்ல எங்கடை வேலை. அதுக்கடுத்ததாகவும் போகவேணும்..."

அதுதான் என்னுடைய பிரச்சினையும் கூட என்றேன் நான். ●

---

**பொய் முகங்கள்....**
**(தொடர்ச்சி)**

"உன்னால இப்பிடி மட்டுந்தான் கதைக்கேலும்" என்று அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் சிவா சைக்கிளை திருப்பிக்கொண்டு போனான். அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தான் கரன். ●

கலம் 38இல் பிரசுரமான "அகதிகள்" (வெளிநாடு) குறுக்கும் நெடுக்கினதும் விடைகள்:

<u>மேலிருந்து கீழ்</u>

1. தற்காப்பு
2. சமுதாயம்
4. (ப)யம்
7. மீட்சி
9. நாடு

<u>இடமிருந்து வலம்</u>

1. தஞ்சம்
5. முயற்சி
6. காலம்
8. தாட்டு
10. புதிய நாசி

---

**நிலைமை மீந்தவள் (தொடர்ச்சி)**

— இப்படிப் பாலகுமார் செய்வதேயில்லை.

"அண்ணை ஒரு சுருள்தலை பெடியன். மாநிறம். பக்கத்து ஸ்ரட்தான். கண்டனியளே?" றோட்டில் நின்று கதைத்துக்கொண்டிருந்தவர்களை விசாரித்தார்கள்.

"பாலகுமாரே பேர்?"


"ஓமண்ணை"

"இவ்வளவு நேரமும் எங்கை கிடந்தனியள். இவ்வளவும் நடந்து முடிஞ்சிருக்கு. ஆள் ஆஸ்பத்திரியிலை"

(இன்னும்வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# கனவை மிதித்தவன்

பார்த்திபன்

அந்தச் சம்பவம் சென்ற புதன் கிழமை நடந்திருந்தது.

ஏதோ அலுவலாக தூ-:ர போயிருந்த முத்து திரும்பிவரும் போது பாலகுமார், ஞானம் வேலை செய்யும் மக்டொனால்ட்ஸுக்கும் போயிருந்தான்.

"என்னடாப்பா இந்தப் பக்கம்?"

"அலுவலாய் வந்தனான். சரியாய் தண்ணிவுடாய்க்குது"

பாலகுமார் பெரிய கடுதாசிப் பேணியில் எட்பீர் மில்க் ஷேக் நிரப்பிக் கொடுத்தான். "குடிச்சிட்டு இன்னும் விடாயெண்டாக் கேள்"

"எவ்வளவடாப்பா?"

"காசு வேண்டாம். உனக்கில்லாத ஷேக்கே?"

இவர்களின் சம்பாசணையை தமிழ் சுப்பவைசர் தள்ளி நின்று அவதானித்துக் கொண்டிருந்தான். ஞானம் குசினிக்குள்.

முத்து மூமுக்கு வந்து சுமார் நான்கு மணித்தியாலம் கழித்து பாலகுமாரும், ஞானமும் அலங்கோலமாக வந்தார்கள். இருவருடைய சேட்டுகளும் கசங்கி, ஆங்காங்கே எண்ணெய் பரவியிருந்தது. தலைமயிரும் குழம்பியிருந்தது. பாலகுமாரின் முகத்தில் இரண்டொரு கீறல் காயங்கள்.

"என்னடாப்பா?" முத்து திகைத்துப் போனான்.

"ஐயா குஸ்திபோட்டிட்டு வந்திருக்கிறார்" என்றான் ஞானம் உடைகளைக் களைந்தபடி.

"என்னடாப்பா நடந்தது சொல்லுங்கோவன்"

"உன்னட்டைக் காசுவாங்காததை தமிழ் சுப்பவைசர் – சொல்லிப்பட்ட தொலைவிப் போனவர்கள்.

தொடர்கதை 52

www.tamilarangam.net

செல் இவனைக் கூப்பிட்டு கடைசி வோனிங் குடுத்திட்டான். வேலை முடிஞ்சு கடையைப் பூட்டுற நேரம் உவன் தாச்சிச்சட்டியாலை சுப்பவைசருக்கு வெளுத்துப் போட்டான்" என்றபடி சாரத்திற்குள் நுழைந்தான் ஞானம்.

"நீ குடிச்ச ஷேக்கின் ர உண்மையான பெறுமதி இருபத்தியஞ்சு பெனிக்கும் வராது. இவர் ஏதோ தன்ரை சொந்தக் காசிலை குறைஞ்சுபோட்டுதெண்ட மாதிரி பே----------. ஏற்கெனவே நல்ல ஆத்திரத்தில இருந்தனான். போட்டு வாட்டியெடுத்துவிட்டன். --------. நீயேன்ரா என்னைப் பிடிச்சனி....?" பாலகுமார் ஞானத்தைக் கேட்டான்.

"நான் என்ன உடனேயே பிடிச்சனானே. காய் நல்லா வேண்டும் மட்டும் பாத்திட்டு மூக்கால ரத்தம் வரத்தானே பிடிச்சனான். பிறகு இசகு பிசகாய் ஏதாலும் நடந்தாலும் எண்டு தான்"

"ஏன்ராப்பா உப்பிடி அடிப்பட்டனி. இப்ப வேலை போயிருக்குமே?" முத்துவின் கவலை.

"---- வேலை. உப்பிடி மனிசர் வேலை செய்யவேணுமே?"

இதற்குள் அந்தக் கட்டிடம் முழுவதும் செய்தி பரவி, அந்தச் சாமத்திலும் பலர் துக்கமும், புதினமும் விசாரிக்கவந்து சேர்ந்தனர்.

"நீ செய்ததுதான்ராப்பா சரி. உப்பிடியானதுகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கத்தான் வேணும்"

"வேலை கிடைக்கிறது எவ்வளவு கஸ்டம். செய்த வேலையை உன்ரை மோட்டுத்தனத்தால விட்டுப்போட்டு வந்து நிக்கிறாய்"

"இக்கணம் இது பெரிய சண்டையாய் வரப்போகுது"

ஆளாளுக்கு அபிப்பிராயம் சொன்னபின் அங்கிருந்த பியர்களை குடித்துவிட்டுப் போனார்கள். ஆகக் கீழ் றூம் செல்வன் முத்து சமைத்து வைத்திருந்ததில் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுத்தான் போனான்.

மறுநாள் உருத்திரனுக்கு இந்தச் சம்பவத்தைத் தெரிவித்தான் முத்து. அவன் இதை அங்கீகரிக்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை. "உதிரி நிலையிலை எல்லாம் அழிஞ்சு போகுது" என்று மட்டும் சொன்னது முத்துவுக்குப் புரியவேயில்லை.

நீண்ட மாதங்கள் கழித்து முத்துவுக்கு ஊரிலிருந்து கடிதம் வந்திருந்தது. பக்கத்து வீட்டுரீச்சர் பொம்பர் தாக்குதலில் செத்துப் போனா. எல்லா வீடுகளும் உடைந்துவிட்டன. புலிகளுக்கு பவுன் கொடுத்துவிட்டோம். மலேரியா, கொலரா பரவுகிறது. மருந்தில்லை. சாப்பாடுமில்லை. கொழும்புவர இன்னும் பாஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடைக்கவில்லை.

கடிதத்தைப் படிக்கும்போது கவலை நிறைய வந்தது. சரியாகக் கஷ்டப் படுகிறார்கள். எல்லோருக்கும் உள்ள கஷ்டம்தானே. இந்தியாவுக்குப் போகச் சொல்லலாம். அங்கும் ஏகப்பட்ட பிரச்சினைகளாம். இங்கே கூப்பிடக் காசில்லை. கொழும்புக்கு வந்தால் ரெலிபோனிலாவது கதைக்கலாம்.

"எப்ப போட்டகடிதம்?" தனக்கு கடிதம் ஏதும் வராத ஆதங்கத்தோடு கேட்டான் ஞானம்.

"பத்து மூண்டு தொண்ணூற்றொண்டு"

"ஊரிலை போட்டதோ?"

"கொழும்பு சீல். ஆரிட்டயோ குடுத்துவிட்டிருக்கினம் போல"

மீனாவும், அம்மாவும் கடிதம் கொடுத்துவிட ஆர் இருக்கிறார்கள். இப்போது அகதி முகாமிலா? வீட்டிலா? ஏன் கடிதம் போடவில்லை? காசில்லையா? அல்லது வேறும் ஏதேன் பிரச்சினையா? ஞானத்திற்கும் துக்கமாயிருந்தது.

அவர்கள் இருவரையும் பார்க்கப் பாலகுமாருக்கு ஏதோ செய்தது. கவலையில் இவர்கள் சமைக்காமல் விட்டு விடுவார்களோ என்று வேறு பயமாயிருந்தது. இலங்கையிலிருந்து அவனுக்கு கடிதம் வந்தாலும், வராவிட்டாலும் அவன் அலட்டிக் கொள்வதில்லை.

"எனக்கும் கடிதத்தைக் காணேலை"

முத்துவும், ஞானமும் அவனை அதிசயமாய்ப் பார்த்தார்கள். கடிதத்தைப் பற்றிப் பாலகுமார் கதைக்கிறான்!

"கலியாணம் ஒண்டு பேச சொல்லி எழுதினனான். வீட்டிலை ஒருதரும் அக்கறை எடுக்கேலை. பொறுப்பெண்டதே இல்லாமல் போச்சு"

"மூதேசி. சனம் பங்கருக்கை இருக்கு. கவலைப்படாட்டிலும் பறவாயில்லை. கலியாணம் பேசச் சொல்லுறியோ? உனக்கு தாய், தேப்பனா வர அதுகள் என்ன பாவம் செய்ததுகளோ"

"இவர் கெட்ட கேட்டுக்குக் கலியாணம் வேறை"

அவர்கள் வழமை நிலைக்குத் திரும்பியிருந்தார்கள்.

"சமைப்போமடா. பசிக்குது"

வார இறுதியில் புதுவருட விழாக்கள் நடப்பதாகப் பல நகரங்களிலிருந்தும் நோட்டீஸ்கள் கிடைத்தன.

"போவோமே?"

"ஆ. விசர். சும்மா டான்சும், பேச்சும்" பாலகுமாருக்கு ஆர்வமில்லை.

"வேற என்ன வேணும்? அமலா சுமலா எண்டா விழுந்தடிச்சுப் போடுங்கோ"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அது வேறை, இதுவேறை"

"ஓமோம். அதெண்டால் மெய்தான்"

"போனா தெரிஞ்ச சனங்களையாவது சந்திக்கலாம்" என்று முத்து சொன்னதும் பாலகுமார் ஒத்துக்கொண்டான். சனம் என்பதற்கு அவனின் அர்த்தம் வேறு.

பக்கத்து நகரில் நடந்த விழாவுக்குப் போனார்கள். சுமாரான சனம். ஆண்கள் வெஸ்ரேன் ஸ்ரைலில் வசதியாக வந்தார்கள். பெண்கள் இன்னும் பண்டைய இலங்கையில்தான்.

சம்பிரதாயப்படி தாமதமாகவே விழா ஆரம்பம். இலங்கையில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செய்ய எல்லாரும் எழுந்து தலை கவிழ்த்து தங்களுக்கு விருப்பமானதை நினைத்துக் கொண்டார்கள்.

வந்தவர்களை வரவேற்று, கரித்தாஸ், டியக்கொனிக்கும் முதற்கண் நன்றி சொல்லி, புதுவருடத்தின் அருமை, பெருமைகளைப் போனவருடம் போலவிளக்கி, இந்நாள் பொன்னாள் என்றெல்லாம் சந்தோசப்பட்டுமுடிந்தபின் மேடை காலியாகி நடனம் ஆரம்பிக்க ஆயத்தங்கள் நடந்தன.

பாலகுமார் சிகரெட், லைற்றருடன் வெளியே வந்தான். மண்டபத்துக்கு முன்னாலும் ஆட்கள் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். இயக்கத்தின் பேய் அற்றாக், குசைன்ரை விசர் வேலை, இமிக்கிறேசன் கிடைக்குமோ, கலியாணவீடு திறமாய்செய்தவன், தர்மதுரையிலை ரஜனி கிழவனாய் வாறது சுப்பர்...

பாலகுமார் அவர்களைவிட்டு விலகி றோட்டுக்கு வந்து றிங்காலே தேடினான். தூரத்தில் ஒன்று லைற் போட்டிருந்தது. போய் ஒரு எக்ஸ்போட்டு வாங்கிக்கொண்டு வந்து ஆட்களில்லாத இடத்தில் நின்று குடித்தான்.

இருள் நன்றாக வந்துவிட்டது. வாகனப் போக்குவரத்துகள் இன்னும் குறையவில்லை. விளம்பர எழுத்துகள் மின்னின.

"இஞ்சாலிப் பக்கம் நிண்டு ஆடின பெட்டையைக் கவனிச்சனியே?" மண்டபத்திற்குள்ளிருந்து வந்த இருவர் கதைத்தபடி பாலகுமாரைத் தாண்டி றிங்காலேக்குப் போனார்கள். டான்ஸ் இன்னும் முடியவில்லை என்று பாலகுமாருக்குத் தெரிந்தது.

பியர் குடித்து முடித்ததும் மயபடி ஒரு சிகரெட் பற்றவைத்தான்.

தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரிலிருந்து அவனை நோக்கிச் சிலர் வந்தார்கள்.

"இவன் எங்க போய்த் துலைஞ்சான்?" ஞானம் முத்துவைச் சுரண்டினான்.

"புகைவிடப் போயிருப்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பான்" முத்து சொல்லிவிட்டு மண்டபத்தைப் பார்த்தான். சொற்பப் பேரே மண்டபத்தில் கவனமாக இருந்தார்கள். ஏனையோர் தங்களுக்குள் கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அழுகின்ற பிள்ளைகளை அப்பாக்களும், அம்மாக்களும் மாறிமாறி வெளியில் கொண்டு போனார்கள். சில சின்னப் பிள்ளைகள் பாரிய இடத்தைக் கண்ட பூரிப்பில் என்ன விளையாடுவதென்று தெரியாமல் ஓடித் திரிந்தார்கள். அவ்வப்போது மேடையிலும் ஏறி அம்மா என்று கூப்பிட்டார்கள்.

இன்னிசை நிகழ்ச்சியில் சினிமாப்பாடல்களை அப்பிடியே ஒப்புவித்து, சனங்கள் கை தட்டி முடிந்ததும், நகைச்சுவை நாடகம் என்று சீன்ஸை மூடி விட்டு கே. எஸ். ராஜா பாணியில் அறிவித்தார்கள்.

"நாடகம் எண்டா பாலகுமார் பாப்பான். ஆளைக் காணேலை"

"வா போய்க் கூட்டியருவோம். ஆரோடயேன் அறுத்து கொண்டு நிப்பான். இதுக்கை பேய் வெக்கையாயிருக்கு"

இருவரும் இருட்டில் தெரியாத நபர்களின் கால்களை மித்து இன்சுலிக்கம், சொறி சொல்லி வாயிலுக்கு வந்தார்கள். ஒரு நிகழ்ச்சி வைக்கக்கூடியளவு கூட்டம் வெளியிலும் நின்றது. குழு குழுவாக நின்று கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

முத்துவும், ஞானமும் இருளுக்குள் தேடினார்கள். பாலகுமாரைக் காணவில்லை. கொஞ்சம் தள்ளி பொலிஸ் கார் நின்றது. இரண்டு தமிழர்களை பொலிஸ்-காரர்கள் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். பிழையான கார் பாக்கிங்காயிருக்கலாம்.

"எங்களைத் தேடி அவன் உள்ளுக்கை போட்டானோ?"

"அல்லாட்டி இருட்டில இடம் பிடிக்கேலாம வேற சீற்றில இருக்கிறானோ தெரியாது. புறோகிறாம் முடியச் சந்திக்கலாம்"

இருவரும் மறுபடி போய் தொடங்கிவிட்ட நாடகத்தைப் பார்த்தார்கள். பழங்காலப்பகிடிகள். கவுண்டமணி, செந்தில் பாணியில் ஆளையால் திட்டுவதை நகைச்சுவையாக்கியிருந்-தார்கள். சிரிப்பு அவ்வளவு இலகுவாக வரவில்லை.

நிகழ்ச்சிகள் முடிய இருவரும் முன் வாசலுக்கு வந்தார்கள். பார்வையாளர்கள் களைப்புடன் சாரிசாரியாக வெளியேறினார்கள். பாலகுமாரைக் காணவில்லை.

மறுபடி மணடபத்திற்குள் போய்ப் பார்த்தார்கள். காலி. இரண்டுபேர் குப்பை சேகரிக்க, மேடையில் நடனமாடியவர்களின் அம்மாக்கள் பிள்ளைகள் போட்டிருந்த நகைகளை பத்திரமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

இருவருக்கும் திகைப்பாயிருந்தது. (தொடர்ச்சி 49 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டிலின் போக்கு
## அல்லது
## எங்களைப் பற்றி நாங்கள்

கலம் 34இல் "தூண்டில் பற்றியும், விடுதலைப் போராட்டம் பற்றியும், சக-ஓடிகளினால் முன்வைக்கப்பட்ட கருத்துகளைத் தொடர்ந்து, பலர் தமது கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர். இது மிகவும் ஆரோக்கியமானதும், வரவேற்கவேண்டியதுமாகும். (நாங்களும் கற்றுக்கொள்ளக்கூடியதாகவிருக்கிறது)

"தூண்டிலின் போக்கு " பற்றிய திறந்த விவாதமாகவாரம்பித்த இந்தக் கருத்துப் பரிமாறல்கள் இப்போது " விடுதலைப் போராட்டம்" என்ற நோக்கிற்கு நகர்ந்திருப்பதால் "தூண்டில்" பற்றி இதுவரை முன்வைக்கப்பட்ட விமர்சனங்களிற்குப் பதிலளிக்கின்றோம்.

இதுவரை வைக்கப்பட்ட-விமர்சனங்கள் அனைத்தையும் 3 பிரிவுக்குள் அடக்கலாம்.

1. புலி பற்றி மட்டுமே விமர்சித்தல்; விமர்சிப்பதற்குத் தகுதியில்லை.
2. எல்லா இயக்கங்களையும் நிராகரித்தல்; தூய்மைவாதம்; கற்பனையான தீர்வு-கள்; மிகையான எதிர்பார்ப்புகள்.
3. வெளிநாட்டில் இருக்கும் தமிழ் அகதிகளை இணைப்பதற்குரிய வேலைத் திட்டத்தை முன்வைக்காமை; போராட்டத்திற்கான சரியான திசை வழியை முன்வைக்காமை.

முதலாவது விமர்சனம்:

புலிகளைப் பற்றி மட்டுமே விமர்சிக்கிறோம் என்பது எந்தளவிற்குச் சரியானது என்பதைத் தொடர்ச்சியாக "தூண்டில்" படிப்பவர்களால் தெரிந்துகொள்ள முடியும்.

இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த காலப் பகுதியில் இந்திய இராணுவத்தின் பயங்கரவாதம் பற்றியும், இந்திய இராணுவத்துடன் கூட்டமைத்துக் கொண்டு இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோவினரின் பயங்கரவாதங்கள் பற்றியும் எமக்குக் கிடைத்த தகவல்களை வெளிப்படுத்தியிருந்தோம். இந்தக் கூட்டுக் குழுக்களால் புலி இயக்க உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கொன்றொழிக்கப்பட்டமை பற்றியவையையும் இதற்குள் அடக்கலாம். தற்போது இதே இயக்கங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுடன் புளொட், ஈ.பி.டி.பி ஆகியவையும் இலங்கை அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கெதிராக இயங்கி வருவதையும் குறிப்பிட்டு வருகிறோம்.

இலங்கை அரசு பற்றியும் இலங்கை அரசின் ஆயுதப் படைகள் பற்றியும், இவற்றின் ஒடுக்குமுறைகள், வன்முறைகள், நோக்கங்கள் பற்றியும் தொடர்ச்சியாக எழுதி வருகிறோம்.

இதேபோல்தான் புலிகள் தனித்தும், இந்திய அரசின் தூண்டுதலின் பேரிலும், இலங்கையரசினது ஒத்துழைப்புடனும் செய்த பயங்கரவாதச் செயல்களையும், மனித உரிமை மீறல்கள், ஜனநாயக மறுப்புகளையும், இவர்களின் பேரக் கூட்டுகளையும் - தெரியப்படுத்தி வருகிறோம் . எனவே புலிகளைப் பற்றி மட்டுமே விமர்சிக்கிறோம் என்றுகூறுவதற்கு எந்த நியாயமுமில்லை.

"புலிகளை விமர்சித்தல்/ எதிர்த்தல்" என்று தனியாகப் பிரித்துப் பார்க்கப்படுவதற்கு இரண்டு காரணங்களை இப்படிக் கூறுபவர்கள் வைத்திருக்கிறார்கள்.

புலிகள் இயக்கத்தின் தனிநபர் வழிபாடுகளும், மிகைப்படுத்தப்படும் இராணுவச் செயற்பாடுகளும் மட்டுமே பார்க்கப்படுவதாலும் பலருக்கும் குறிப்பாக வெளிநாடுகளுக்கு வந்துள்ள பலருக்கு "நாம் தப்பி வந்துவிட்டோம்; அவர்கள் செத்துமடிகிறார்கள்" அல்லது" எங்களால்தான் எதுவும் செய்யமுடியவில்லை; அவர்கள் ஏதோ செய்கிறார்கள்" என்று ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிவிட்டிருப்பதாலும் புலி இயக்கத்தை விமர்சித்தல் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாமலிருப்பது ஒரு காரணம்.

போராட்டம் பற்றியும் போராட்டத்தின் போக்கு பற்றிய அறிதலும் இல்லாமல் அல்லது அதற்கு முனையாமல் ஒரு தனி இயக்கத்தினூடாகவே போராட்டத்தைப் பார்ப்பதும், அந்த இயக்கத்தின் போக்கிற்கேற்ப போராட்டத்தை 'அட்ஜஸ்ற்' பண்ணிப் பார்ப்பதும் எத்தகைய விளைவுகளை உண்டுபண்ணும் என்பதைக் கடந்த காலங்களிலும், தற்போதும் கண்டுகொண்டும், அனுபவித்துக் கொண்டுமிருக்கின்றோம்.

இராணுவச் செயற்பாடுகளும், ஒருவகை 'கவர்ச்சி' நடமுறைகளும் மட்டுமே போராட்டங்களாகிவிடாது. இவை மட்டுமே ஒரு இயக்கத்தை விடுதலை இயக்கமாக்கிவிடாது. பாதுகாப்பு யுத்தம் என்பது விடுதலை யுத்தம் அல்ல என்பதை ஈழத்திலிருப்பவர்கள் தங்கள் ஆக்கங்களில் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறார்கள். புலி உட்பட இன்றைய இயக்கங்கள் எவையுமே மக்களின் விடுதலையை பெற்றுத் தரப்போவதில்லை என்பதையும் கூட.

ஒரு இயக்கம் மக்களைச் சார்ந்திருக்கும்போது அதை வி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மர்சனங்கள், எதிர்ப்புகளிலிருந்து 'எப்படியாவது' காப்பாற்றவேண்டும் என்ற தேவை எழவேண்டிய அவசியமே இல்லை. தங்களால் மூடிமறைக்கப்படும் தவறான பக்கங்கள் அம்பலப்படுத்தப்படுவதால் ஏற்படும் பயமும், இவற்றுடன் பிணைந்துள்ள தங்கள் நலன்கள் பாதிக்கப்படுவதால் ஏற்படும் ஆத்திரமுமே பலரைத் தம் இயக்கத்தை 'காப்பாற்றுவதற்கு', 'எப்படியாவது' செயற்படவைப்பது இரண்டாவது காரணமாகும். "புலியை எதிர்க்கிறார்கள்", "விமர்சிப்பதற்கு தகுதியில்லை" என்று கூறுபவர்களில் பெரும்பாலானவர்கள் இவர்களே.

தமிழ் (பேசும்!) மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம்/சுயநிர்ணய உரிமைப் போராட்டம் என்பது தனி நபர்களினதோ, தனிக் குழுக்களினதோ உரிமையல்ல. எதிரி என்று சொல்லி மோதுவதும், பிறகு நண்பர்கள் என்று ரகசியமாகப் பேசுவதும், போராட்டத்திற்கு தங்களையே அர்ப்பணித்துள்ள போராளிகளையே தங்கள் பதவிகளுக்கும், பேரங்களுக்குமாக தலைமைகள் பலிகொடுப்பதும் ஒன்றும் ஒரு சிலரின் சொந்தவிடயமில்லை. "போராடுபவர்களை விமர்சிக்கத் தகுதியில்லை" என்பவர்கள் அழிக்கப்பட்ட இலட்சக்கணக்கான உயிர்களுக்கும், உடைமைகளுக்கும், அடித்துத் துரத்தப்பட்ட இலட்சக்கணக்கான அகதிகளுக்கும், காணாமற் போனவர்களுக்கும் பதில் சொல்லுவார்களா?.

பிழையானதை விமர்சிக்கும் அதேநேரம் சரியானதை ஆதரிக்கவும் தயாராயிருக்கவேண்டும் என்ற விமர்சனத்தை ஏற்றுக்கொள்ள முடியும். எமது கடந்தகாலத் தலையங்கங்களில் சரியானவைகளைத் தெளிவாக ஆதரிக்காத தவறுகள் நிகழ்ந்துள்ளன என்பதை ஒப்புக்கொள்கிறோம்.

இலங்கையில் நிகழும் அரசியல் மாற்றங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் எங்களை பாதிக்கும் சம்பந்தமுடையவர்களாய் நாமிருப்பதால் " வெளிநாட்டுக்கு ஓடி வந்தவர்கள் " என்ற ஒரே காரணத்தைவைத்து விமர்சித்தல், அம்பலப்படுத்தல், தவறுகளை எதிர்த்தல்..... என்பவற்றைத் தவிர்ப்பது எங்களால் இயலாது. இதன் மூலம் இன்றைய எங்கள் இருப்பையும் நாங்கள் நியாயப்படுத்த முனையவில்லை.

இரண்டாவது விமர்சனம்:

போராட்டம் என்பதை நாம் மனிதாபிமானத்துக்கு அப்பாற்பட்டதாகப் பார்க்கவில்லை. மனிதாபிமான அடிப்படையில் விமர்சிப்பதால் பேப்பரையும், நேரத்தையும் வீணாக்கலாமென்ற பிரஜைகளின் கருத்துடன் எம்மால் உடன்பட முடியவில்லை (கலம்: 39). 'மனிதாபிமானம்' என்று குறிப்பிட்டவுடன் பலருக்கும் ஒரு குழப்பம் வந்துவிடுகிறது. இங்கேதான் நாம்

www.tamilarangam.net

நடுநிலையாளர்கள் அல்ல என்பதை மறுபடி தெளிவாக்கவேண்டியுள்ளது.

அரசபடைகள் கொல்லப்படும்போதோ, கொலைப்படைகளுக்குத் தலைமை வகித்த பாதுகாப்பமைச்சர் கொல்லப்பட்டபோதோ, தனது அரசியல் எதிரிகளைக் கொல்ல ஆயுத இயக்கத்தைக் கட்டியமைத்த - த.வி.கூ. தலைவர்கள் கொல்லப்பட்டபோதோ, போராளிகளைச் சவுக்குத் தோப்பில் புதைத்துச் சரித்திரம் படைத்த புளொட் தலைவர், ஆயிரக் கணக்கில் மக்களைக் கொன்றுகுவித்த இந்திய இராணுவத்துக்கும், இந்திய அரசுக்கும் சேவகம் செய்ததுடன், மக்கள் படு கொலைகளில் தாமும் நேரடியாகப் பங்கெடுத்துக்கொண்ட ஈ.பி. ஆர்.எல்.எவ்.வின் தலைவர்கள் கொல்லப்பட்டபோதோ நாம் துக்கம் கொண்டாடவில்லை. அஞ்சலி செலுத்தவில்லை!

எமது மனிதாபிமானம் நிச்சயமாகச் சார்பு நிலையானது. இது பயங்கரவாதத்திற்கும் ஒடுக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் ஆதிக்கத்துக்கும் முகங் கொடுக்கும் மக்களின் பக்கமானதே- ஒழிய வன்முறையைக் கட்டவிழ்த்துவிடும் ஆயுதபாணிகளுக்கோ, அரசுக்கானதோ அல்ல.

எனவே தான் விடுதலைக்கும், மனிதாபிமானத்துக்கும் எதிரான அனைத்து இயக்கங்களையும் நாம் நிராகரிக்கின்றோம். இந்த இயக்கங்களை நிராகரிப்பதனால் வரலாறு சமூக சக்திகளுக்கிடையிலான போராட்டங்களினால் இயங்குகிறது என்பதையோ, போராட்டத்தில் சக்திகளின் அணிசேர்க்கையையோ - நாம் புறக்கணிக்கவில்லை. நாம் இயக்கங்களை நிராகரிப்பதென்பது இந்த இயக்கங்களைத் தலைமைகளாகக் கொள்ளாததும், இந்த இயக்கங்களின் செயற்பாடுகளை மக்களின் விடுதலைக்கானதாகக் கொள்ளாததும் என்பதையே அர்த்தப்படுத்துகிறது. இது எமது தலையங்களில் தெளிவுபடுத்தப்படவில்லையாயின் அது எமது தவறுதான்.

அர்த்தமற்றமுறையில் உயிரிழப்புகளையும், திசை திருப்பல்களையும் மேற்கொள்ளும் தவறுகளை யார் செய்தாலும் நாம் தவறு என்கிறோம். மக்களின் உயிர்கள், உரிமைகள் பெறுமதியானவை. இவை அரசினால் அழிக்கப்படும்போது ஒரு விதமான தவறாகவும், இயக்கங்களினால் மேற்கொள்ளப்படும்போதுவேறு விதமான தவறாகவும் எங்களால் பார்க்கமுடியவில்லை. (தத்துவ வறுமையோ?)

தூய்மைவாதம் என்பது யாரும் எந்தத் தவறும் செய்யமாட்டார்கள் என்று எதிர்பார்ப்பது. தூய்மை வாதத்தை நாம் கடைப்பிடிக்கிறோம் என்றால் விமர்சனம்-சுயவிமர்சனம் என்பதையே நாம் நிராகரிப்பதாகும்.

அடுத்து, கற்பனையான தீர்வுகளும், மிகையான எதிர்பார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்புகளும் அடங்கியதாக எமது ஆக்கங்கள் அமைகின்றன என்ற விமர்சனமாகும். இதுவரை கால "தூண்டில்" களின் தலையங்கங்களில் - பெரும்பாலும் விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக - நாம் தீர்வு எதையும் வைக்கவில்லை என்பதே உண்மையாகும்! பல வாசகர்கள் கடிதங்கள்மூலமாகவும், நேரடியாகவும் "தூண்டில் வைக்கும் தீர்வுதான் என்ன..?" என்று தொடர்ந்துகேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இது பற்றிய பதிலை மூன்றாவது விமர்சனத்தின் கீழ் பார்ப்போம்.

இலங்கை பற்றிய எமது தலையங்கங்களில், அங்குள்ள அரசியல் நிலைமைகள் தொடர்பாக நாம் இங்கு (வெளிநாடுகளில்) செய்யக்கூடியவை எவை என்பது பற்றியும், மக்களின் நிலை எவ்வாறுள்ளது என்பது பற்றியுமே கூடுதலாகத் தேடியுள்ளோம் அல்லது சொல்லியுள்ளோம். இதில் நாம் விரும்பியோ, விரும்பாமலோ இந்நிகழ்வுகளோடு சம்பந்தப்பட்டிருக்கும் சமூக சக்திகள் எப்படிச் செயற்பட்டிருக்கமுடியும்... என்பது போன்றவற்றை கணக்கிலெடுக்காத தவறை இழைத்துள்ளோம். இதனாலும், யதார்த்தம் பற்றிய பூரண தகவல்கள் இன்மையாலும், பிரச்சினைகளின் நேரடியான தாக்கம் உள்ள தளத்தில் இல்லாததாலுமே எமது ஆக்கங்கள் மிகையான எதிர்பார்ப்புகளைக் கொண்டதாக அமைகின்றன போலும். (மிகுதி அடுத்த இதழில்!)

# தூண்டில்

ஏப்ரல் 1991

இலம்: 40

ஆசிரியர் குழு: கடலோடிகள்

முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
F. R. G

தொலைபேசி: (0231)136633
(புதன் கிழமைகளில் 14-20மணி வரை)

சந்தா:

| | | | |
|---|---|---|---|
| ஜேர்மனி | 6 மாதங்கள் | - | 20,-டி.எம் |
| | 1 வருடம் | - | 38,-டி.எம் |
| ஐரோப்பா | 6 மாதங்கள் | - | 25,-டி.எம் |
| | 1 வருடம் | - | 48,-டி.எம் |
| அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா | 1 வருடம் | - | 65,-டி.எம் |
| அவுஸ்ரேலியா | 1 வருடம் | - | 75,-டி.எம் |

தபாற்கணக்கு இல: 30807468
Postscheckamt Dortmund
BLZ 44olooo46

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தா நிதியை அனுப்பி வைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவிப்பதனால் சஞ்சிகையை அனுப்பி வைப்பதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

உங்கள் கருத்துகள், விமர்சனங்களுடன் எங்களுடையதும், உங்களுடையதுமான முயற்சிகளை பயனுள்ளதாக்குவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

தற்போதைய காலம் நாம் ஒவ்வொருவரும் எமது மூளையைக் கசக்கிப் பிழிந்து பல விடயங்களை பற்றியும் மனம் திறந்து சிந்திக்க வேண்டிய காலம்.

தேக்கத்திற்கும், தோல்விக்கும் உள்ளாகும்போது விரக்தியடைவது நோய்க்கூறான மனோபாவம். ஆன்மீகவாதம் என்றும் இதைச் சொல்லலாம். இதை அறிவுபூர்வமான பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதும், தோல்வியின் இயக்கவியல் காரணங்களைக் கண்டுபிடிப்பதும், அதிலிருந்து வெற்றிக்கு வழி காண்பதும், அவ்வழியில் மீள நடைபோடுவதும்தான் சரியான பொருள்முதல்வாதச் செயல்முறை.

விவாதங்களை முழுமையாக அனுமதியுங்கள். எல்லா விடயங்களையும் கேள்விக்கு உட்படுத்துங்கள். அது எதுவாக இருப்பினும் சரிதான். எதுவும் தர்க்க நியாயங்கட்கு, ஆய்வுக்கு அப்பாற்பட்டதல்ல. குருட்டு வழிபாடு, நம்பிக்கை போன்றவை ஒருபோதும் நமக்கு உதவப் போவதில்லை. அவை இன்று மண்ணில் மண்டையோடுகள் இடறுப்படுகிற வீதிகளையும், மனிதக் குருதியில் சேறாய்ச் சிவந்த வயல்களையும் உருவாக்கிவிட்டிருப்பது போதும்.

நாம் ஆயிரக்கணக்கான அரும்பெரும் உயிர்களை விலையாகக் கொடுத்துள்ளோம். இனிப்போதும், எமது அரசியல், எமது கோட்பாடுகள், எமது தத்துவங்கள், எமது சிந்தனைமுறை அனைத்தும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும்.